விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 105 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 20 வியாழக்கிழமை (03.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தடை நீடிப்பு

## அசல் பிறப்புச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஏற்க உத்தரவு

(கொழும்பு)

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களுடன் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் நடவடிக்கைகள் மீண்டும் இன்று வரையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில் இருந்து பிறப்புச் சான்றிதழ்களின் அசல் நகல்

15

சிறப்புக் கட்டுரையாளர் அன்பு ஜவஹர்ஷா எழுதும்

01.07.2025 முதல் ஓய்வூதியர்களுக்கு என்ன கிடைக்கும்?

இன்று முதல் உங்கள் வலம்புரியில்

14ஆம் பக்கம் பார்க்க

### இளவாலை உயரப்புலத்தில்

## பிறந்து 43 நாட்களான பெண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை உயரப்புலத்தில் பிறந்து 43 நாட்களான பெண் குழந்தை ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கப்பட்ட பின்னர் 6 மணியளவில் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதையடுத்து மயக்கமடைந்துள்ளது.

16

# மோடி நாளை இலங்கை விஜயம்

## நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு



(கொழும்பு)

பாரதப் பிரதமர் மோடி இரு நாட்கள் அரசுமுறைப் பயணமாக நாளை வெள்ளிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மோடியின் வருகையை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

### தேசபந்து தென்னகோனுக்கு

## எதிரான பிரேரணை

### அடுத்த வாரம் சபையில்

(கொழும்பு)

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் (IGP) தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை ஏப்ரல் 8 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

15

### 9ஆம் திகதிவரை

## வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்

15

### குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தை

## யாழில் இம்மாத இறுதிக்குள் நிறுவுவதற்குத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாத இறுதிக்குள் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவையில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும்

15

### நீதி அமைச்சர் இன்று யாழ்.விஜயம்

## திஸ்ஸ விகாரை தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபடுவார்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார தலைமையில் யாழ்.நாக விகாரையில் இன்று வியாழக்கிழமை கலந்துரை

15

## மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும்

### கடற்றொழிலாளர் சங்கம் பாரதப் பிரதமரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குப் பிரதமர் மோடி சரியான தீர்வு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேள

15

## பற்பசையினுள் போதைப்பொருள் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலைக்குள் பற்பசையினுள் போதைப்பொருளை மறைத்து எடுத்துச்

02

## இனப் படுகொலையாளிகளை அரசு பாதுகாக்கின்றது

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

கடந்த கால ஆட்சியாளர்களின் இனப் படுகொலை உள்ளிட்ட விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்காமல் அவர்களைப் பாதுகாக்கின்ற செயற்பாட்டையே தேசிய மக்கள் சக்தி

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலை...

அரசு முன்னெடுக்கின்றது. இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டினார். நெடுந்தீவில் மக்கள் சந்திப்பு ஒன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நடைபெறவுள்ள குட்டித் தேர்தலில் குட்டி அரசு அமைப்பதற்கு ஆணையைத்தாருங்கள். அந்த ஆணையைப் பெற்று மீண்டும் நாம் ஆட்சியமைப்போம். இந்த நாட்டில் பல்வேறு அரசுகள் ஆட்சிப் பீடத்துக்கு வந்திருந்தாலும் அதில் எந்த அரசும் தமிழ் மக்களுக்கானதாக இருந்ததில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அந்த அரசுகள் எங்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்திருக்கின்றன.

அதே போன்று நாட்டில் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசும் தமிழ் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை. அதிலும் மாற்றம் எனக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசிடம் பல்வேறு கேள்விகளும் எதிர்பார்ப்புகளும் எமது மக்களிடத்தே இருக்கின்றன.

குறிப்பாக எங்களுக்கு எதிராக இப்போது யுத்தம் நடத்தவில்லை. ஆனால், மிகநூதனமாக இந்த மண்ணில் இருந்து அகற்றப்பட்டு வருகின்றோம்.

உதாரணத்துக்குச் சொல்வதாயின் எங்களுக்கு எதிராக மிகப் பெரிய படுகொலையை மகிந்த அரசு இந்த மண்ணில் செய்திருந்தது. அதை மூடி மறைக்கும் செயற்பாட்டிலே இந்த அரசும் செயற்படுகின்றது.

குறிப்பாக குற்றம் நடக்கவில்லை என்றும், எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் இவர்கள் சொல்கின்றனர். இதனை எமது மக்கள் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். எமது மக்களுக்கு எதிராகப் படுகொலைகளைச் செய்தார்கள் என்ற குற்றத்துக்காக இலங்கையைச் சேர்ந்த நான்கு பேருக்கு பிரித்தானியா தடை விதித்துள்ளது. அதேபோன்று கனடாவும் எங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து வருகின்றது.

இப்படி உலகம் எமக்காகச் சிந்தித்துச் செயற்படுகின்ற சூழலில் அந்த உலக நாடுகளுக்கு எதிராகத் தெற்கிலிருந்து பலரும் கொக்கரித்து வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. என்.பி.பி தான் ஆட்சியை நடத்திவருகின்றது. அதிலும் என்.பி.பி இல்லாத தயாசிறி ஜயசேகர மற்றும் விமல் வீரவன்ச போன்றோர் புதுப் புதுக் கதைகளைக் கூறிக் கொண்டு கொக்கரிக்கின்றனர். இதனைப் பார்க்கின்ற போது சிங்களவர்கள் தமக்கு ஒரு பிரச்சினை என்று வந்தால் ஒன்றாக உள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களாகிய நாங்கள்தான் பிரிந்து நிற்கின்றோம். அப்படியாக எங்களிடத்திலும் ஒற்றுமை அவசியம்.சர்வதேச நாடுகளின் செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது உலகத்தின் பூகோள அரசியலில் எங்களுக்கான மாற்றங்களும் மெல்ல மெல்ல நகருகின்றன எனத் தெரிகின்றது என்றார். (ம-7,4)

## பாரதப் பிரதமருடனான ஒப்பந்தங்கள் கைச்சாத்தான பின்னரே பகிரங்கப்படுத்தப்படும்

### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த

பாரதப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை விஜயத்தின் போது கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பிலான முழுமையான விபரங்கள் கைச்சாத்தாகிய பின்னரே பகிரங்கப்படுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது வலுசக்தி, சுகாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

நாளை இலங்கை வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் முக்கிய இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரினால் விசேட உரை நிகழ்த்தப்படும்.

அத்துடன் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது கைச்சாத்திடப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்கள் இடைக்கிடையே வழங்கப்படும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7,4)

## மோடி நாளை...

இந்த நிலையில் அவரது வருகைக்கு முன்னதாக இலங்கை பாதுகாப்பு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற இந்தியாவிலிருந்து விசேட பாதுகாப்புக் குழுவொன்று கொழும்பை வந்தடைந்துள்ளதாக புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோடியின் வருகையின் போது கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் சிறப்பு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை கட்டுநாயக்காவில் சர்வதேச விமான நிலையத்தில் மோடி வருகை தந்தது முதல் 6 ஆம் திகதி அவர் செல்லும் வரை கொழும்பு உட்பட பல பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமருடன் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவுச் செயலாளர் மற்றும் மூத்த இந்திய அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்வார்கள்.

இந்தியப் பிரதமருடன் வெளியுறவு அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், வெளியுறவுச் செயலாளர் மற்றும் பிற மூத்த இந்திய அதிகாரிகள் வருகைதர உள்ளனர். இந்தப் பயணத்தின் போது, பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரியா ஆகியோருடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்த உள்ளார்.

மேலும், பிரதமர் மோடி, அநுராதபுரத்தில் புனித ஸ்ரீ மகா போதியில் வழிபாடு நடத்தவும், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் பல திட்டங்களைத் தொடங்கி வைக்கவும் உள்ளார்.

மேல் மாகாண மூத்த டிஐஜி சஞ்சீவ தர்மரத்னே, மோடியின் கொழும்பு பயணத்துக்கான பாதுகாப்புகளை கண்காணிக்க உள்ளார். ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் இந்திய பாதுகாப்புக் குழுவும் ஒருங்கிணைந்து இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மோடியும் அவரது குழுவினரும் விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு பயணிக்கும்போதும், கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் பயணிக்கும் போதும் பல வீதிகள் அவ்வப்போது மூடப்படும். கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டிற்காக அதிகளவான பொலிஸார் மற்றும் சிறப்புப் படையினர் பயன்படுத்தப்படவுள்ளனர். (ம-7)

## பற்பசையினுள்...

சென்ற ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் நேற்று புதன்கிழமை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் இருந்த நபர் ஒருவரைப் பார்வையிட வந்த மன்னார் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு சூட்சுமமாக பற்பசை ரியூப்பிற்குள் குடு மற்றும் ஐஸ் போதைப்பொருட்களை மறைத்து எடுத்து வந்திருந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(ம-7,4)


யாழ். நகரிற்கு முதல் முறையாக

Heron Consultancy (Pvt) Ltd

நீங்கள் வெளிநாடு செல்ல காத்திருப்பவர்களா?
நாம் அதற்கான ஆலோசனையும் தீர்வையும் உங்களுக்குப் பெற்றுத் தருவோம்.



- UK
- Canada
- Australia
- France
- Italy
- Swiss

நாடுகளுக்கு Visit visa ஏற்பாடு செய்து தரப்படும்



- Newzealand
- Australia
- UK
- Canada Student visa

மற்றும்

- UK/ Canada

நாடுகளுக்காக வேலைவாய்ப்பு சம்பந்தமான தீர்வு தரப்படும்.

(C-109)

Heron Consultancy (Pvt) Ltd
Tilko hotel Jaffna
06.04.2025, 9.00 am to 5.00 pm

முன்பதிவுகளுக்கு :
Sarmila - 076 484 7301
Ragu - 076 304 4839



MODERN EDUCATION CENTRE
Nelliady - 9.00 A.M Pointpedro - 9.30 A.M
புதிய கல்வியாண்டு
A/L 2027
கலை வர்த்தகப் பிரிவுகள்
வழமையான ஆசிரியர் குழுவுடன்
ஆரம்பம் : 04.04.2025 நிர்வாகி
(C-2605)



கண்ணீர் அஞ்சலி



பிறப்பு இறப்பு

எமது பாடசாலை ஆசிரியர் துரையப்பா கௌரிபாலன் அவர்களின் பாசமிகு தந்தையான

அமரர் கந்தையா துரையப்பா

அவர்கள் 31.03.2025 அன்று இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்பது மட்டுமே

# மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வாகும்

## மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் முன்வைத்த ஸ்டாலின்

(சென்னை)

**“கச்சதீவை மீட்பது மட்டுமே தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடித்தலைப் பாதுகாப்பதற்கான ஒரே நிரந்தரத் தீர்வு” என்று தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.**




கச்சதீவை மீட்பது தொடர்பாக மாநில சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை முன் வைத்துள்ளார்.

அதில் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் எதிர்கொள்ளும் துன்பங்களைத் தணிக்க, கச்சதீவைப் பெறுவது மட்டுமே நிரந்தரத் தீர்வு என்று அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்து, கச்சதீவை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளதுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நமது மீனவர்களையும் அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என இலங்கைக்கான தனது அதிகாரப் பூர்வ பயணத்தின் போது இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த பிரதமர் நரேந்திர மோடியை இந்த தீர்மானம் வலியுறுத்துகிறது.

அண்மைய மாதங்களில், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன. 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் தான் இன்று நாடு எதிர்கொள்ளும் இந்த நிலைமைக்கு மூல காரணம்.

1974 ஆம் ஆண்டு அப்போதைய மத்திய அரசு மாநில அரசுடன் கலந்தாலோசித்து சர்வதேச கடல்எல்லையை வரைந்த போது இந்தப் பிரச்சினை தொடங்கியது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-8)

## ஜப்பான் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்



(கொழும்பு)

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படைக்குச் சொந்தமான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

Uraga-Class Mines weeper Tender வகைக்கு சொந்தமான ‘BUNGO’ என்ற இந்தக் கப்பலானது 141 மீற்றர் நீளமும், மொத்தம் 125 அங்கத்தவர்களையும் கொண்டதாகும்.

மேலும் இந்த கப்பல்களானது இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் அங்கத்துவக் குழுவினர்கள் கொழும்புப் பிரதேசத்தில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடத் தீர்மானித்துள்ளதுடன், உத்தியோக பூர்வ விஜயத்தின் பின்னர் நாளை கப்பல்களானது இலங்கையை விட்டு புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# குறைந்த விலையில் போசாக்கு உணவு

## அரசின் புதிய திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் குறைந்த விலையில் போசாக்கான உணவைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் பெலெஸ்ஸ உணவகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய உணவு ஊக்குவிப்பு சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து வர்த்தகர்களின் ஆதரவுடன் நடத்திவரும் இந்த உணவகத் திட்டம் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதனால் 200 ரூபாய் என்ற குறைந்த விலையில் போசாக்கு நிறைந்த உணவை உண்டு மகிழும் வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும் என்பதோடு, இந்த போசாக்கான சமச்சீர் உணவின் செய்முறை அனைத்து அரச மற்றும் தனியார் உணவகங்களிலும் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளமையும் விசேட அம்சமாகும். (நி-8)

# தனியார் துறை ஊழியர்களின் ஊதியத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களின் மாதாந்த குறைந்தபட்ச ஊதியத்தை 27,000 ரூபாயாக உயர்த்துவதற்கான சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக தொழிலாளர் அமைச்சகம் அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸவின் கூற்றுப்படி முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்ட பின்னர் எதிர்வரும் மே மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தற்போது தனியார் துறை ஊழியர்களுக்கான் குறைந்தபட்ச மாத ஊதியம் 21,000 ரூபாயாக உள்ளது.

இந்த ஊதிய உயர்வு இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்ப உள்ளதாகவும் அமைச்சக செயலாளர் குறிப்பிட்டார்.

இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து, தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச மாத ஊதியம் அடுத்த ஆண்டு 35,000 ரூபாயாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தொழிலாளர் அமைச்சகத்தின் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த தகவலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தனது பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார். (நி-8)

# தவத்திரு வே.முருகேசு சுவாமியின் 28 ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின் 28 ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற உள்ளது.

மேற்படி குருபூசை நிகழ்வு விசேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமிகளின் நினைவுப் பேருரையுடன் கூடிய அறுபத்து மூவர் குருபூசையும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)



# முன்னாள் முதலமைச்சருக்கு கடூழிய சிறைத்தண்டனை

## கொழும்பு உயர் நீதிமன்றம் அதிரடி

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் உள்ளிட்ட இருவருக்கு 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அதன்படி முன்னாள் முதலமைச்சரான எஸ்.எம்.ரஞ்சித் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளரான சாந்தி சந்திரசேன ஆகியோருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளில் ரஞ்சித் மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளர் ஆகியோர் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே குறித்த இருவருக்கும் 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் தலா 200,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண முதலமைச்சராக பதவி வகித்த காலப்பகுதியில் சட்டவிரோதமாக எரிபொருள் கொடுப்பனவாக 2,080,500 ரூபாவை பெற்றுக் கொண்டதன் ஊடாக ஊழல் இடம்பெற்றுள்ளதாக பிரதி வாதிகள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சிராஜ், பட்லர் அசத்தல்


# பெங்களூரின் வெற்றி நடைக்கு குஜராத் போட்டது முட்டுக்கட்டை

சிராஜின் வேகமும், பட்லரின் அதிரடியும் கைகொடுக்க பெங்களூரின் வெற்றி நடைக்கு முட்டுக்கட்டை போட்டு குஜராத் அணி 8 விக்கெட்டுக்களால் 2ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் 14வது போட்டியில் பெங்களூரு, குஜராத் அணிகள் மோதின.

சின்னசாமி மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணியின் தலைவர் கில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். அதன்படி களமிறங்கிய பெங்களூரு அணி நட்சத்திர வீரர் விராட் கோலியை 7 ஓட்டங்களில் இழந்து அதிர்ச்சியடைந்தது.



தொடர்ந்து பில் சால்ட் 14, படிக்கல் 4 என விரைவாக வெளியேற பெங்களூரு அணி, 6 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 38 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தடுமாறியது. தொடர்ந்து 12 ஓட்டங்களுடன் அணித் தலைவர் பட்டிதார் ஆட்டமிழந்தார். ஜிதேஷ் ஷர்மா (34), லிவிங்ஸ்டன் ஜோடி சேர்ந்து அணியை மெல்ல மெல்ல சரிவில் இருந்து மீட்டனர். ஜிதேஷ் ஷர்மா (34), லிவிங்ஸ்டன் (54), ரிம் டேவிட் (30 நாட் அவுட்) ஆகியோரின் இறுதிக்கட்ட பங்களிப்பால் பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 169 ஓட்டங்களை எடுத்தது.

குஜராத் அணி தரப்பில் சிராஜ் 3 விக்கெட்டுக்களும் சாய் கிஷோர் 2 விக்கெட்டுக்களும் அர்ஷத் கான், இஷாந்த் ஷர்மா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

170 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய குஜராத் அணிக்கு சாய் சுதர்சன் 49, சுப்மன் கில் 14 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அதிகபட்சமாக ஜாஸ் பட்லர் அதிரடியாக ஆடி 73 ஓட்டங்களும் சர்பான் ரூதர்போர்ட் ஆட்டமிழக்காமல் எடுத்த 30 ஓட்டங்களும் கைகொடுக்க இறுதியில் 17.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது. (ம-7,4)




# 2 ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி

பாகிஸ்தான் அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 84 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்தின் ஹமில்டனில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த நிலையில் 293 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி 41.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 208 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியடைந்தது. (நி-8)




# 'புஷ்பா' பட பாணியில் ஹசரங்க வெற்றிக்களிப்பு




அஸ்ஸாமின் கவுஹாத்தி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (மார்ச்-30) நடைபெற்ற ராஜஸ்தான் ராயல்ஸ் - சென்னை அணிகளுக்கிடையேயான போட்டியில் 6 ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி சென்னை அணியை வீழ்த்தி வெற்றி பெற்றிருக்கிறது.

குறிப்பாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு ஹசரங்க முக்கிய பங்காற்றி ஆட்டநாயகன் விருதையும் வென்றிருக்கிறார்.

அணியின் வெற்றிக்குப்பிறகு பேசிய ஹசரங்க, குறித்த போட்டியில் அடிப் [illegible] சில விடயங்களை சரியாக செய்துவிட வேண்டுமென்று நினைத்தேன்.

முதல் இன்னிங்ஸில் எங்கள் பட்ஸ்மேன்கள் நன்றாக பட்டிங் செய்தனர்.

அதே போல எதிரணியில் ருதுராஜ் நன்றாக பட்டிங் செய்தார். இன்னிங்ஸின் முடிவில் நான் அவரை அவுட் செய்தேன்.

விக்கெட் வீழ்த்திய பிறகு புஷ்பா பட பாணியில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதைப் பற்றி ஹசரங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதுதொடர்பாக பேசியவர், "இந்தியாவில், தெலுங்கு, மலையாளம் மற்றும் தமிழ் படங்களைப் பார்ப்பது மிகவும் பிடிக்கும். புஷ்பா படம் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதிலிருந்து தான் அந்த ஸ்டைலை எடுத்தேன்" என்றார். (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் 19 ஆயிரம் பேர் புற்றுநோயால் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் வருடாந்தம் 33 ஆயிரம் புதிய புற்றுநோய் நோயாளர்கள் சுகாதாரத் துறையால் அடையாளம் காணப்படுவதுடன், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 19 ஆயிரம் பேர் புற்று நோயால் உயிரிழப்பதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**



நாட்டில் புற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்தவும் தடுக்கவும் செயற்படுத்தப்பட்டுள்ள தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத் திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினர் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜய திஸ்ஸ ஆகியோருக்கிடையில் சமீபத்தில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது சுகாதார அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் சுகாதாரத் துறை எதிர்கொள்ளும் முக்கிய சவாலாக புற்றுநோய்க்கான சிகிச்சை சேவைகள் உள்ளன. புற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது.

பெரும்பாலான புற்றுநோயாளர்கள் வாய் மற்றும் கழுத்து புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்கள் என தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. மேலும், மார்பகப் புற்றுநோய் பெண்களிடையே மரண வீதம் அதிகரிப்பதற்கு முக்கியக் காரணமாக உள்ளது.

அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 19 ஆயிரம் பேர் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-8)

# தேர்தல் தொடர்பில் 413 முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி ) 413 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 2 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 382 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 28 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

# புகைப்பிடித்தலுக்கு எதிரான விழிப்புணர்வு மன்னாரில் முன்னெடுப்பு




(மன்னார்)

மன்னார் மாவட்ட இளம் செயற்பாட்டாளர்களின் முன்னணியில், புகைப்பிடித்தலுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நேற்று முன்தினம் மன்னார் பொது பேருந்து நிலையத்தில் ஒரு சமூக விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களுக்கு புகைப்பிடித்தலின் பாதிப்பு குறித்த தகவல்களை பரப்பும் நோக்கில், புகைப்பிடித்தலை மேற்கொள்பவர்களுக்கு சுவரொட்டிகள் மூலம் விழிப்புணர்வு நிகழ்த்தப்பட்டது. (நி-8-285)

# பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டை சீர்குலைத்தல் மற்றும் மக்களிடையே குழப்பமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் செயற்படும் ஒழுங்கற்ற சிவில் அமைப்புகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளது.

இந்த நிறுவனங்கள் தொழில் திணைக்களத்திலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்திலோ பதிவு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த அமைப்புகள் தொடர்பில் தொழில் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகம் ஆகியவற்றிடம் இருந்து அறிக்கைகள் கோரப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இந்த அமைப்புகளால் வெளியிடப்படும் சில ஊடக அறிக்கைகள் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் குழப்பத்தையும் வெறுக்கத்தக்க மற்றும் சர்ச்சைக்குரிய கருத்துக்களையும் ஏற்படுத்துகின்றன.

கடந்த காலங்களில் விவசாயிகள், நுகர்வோர், சுயதொழிலில் ஈடுபடுவோர் மற்றும் தொழில் முனைவோரைப் பிரதிநிதித்துவப்படுத்திய சில அமைப்புகளின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுந்துள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார தெரிவித்துள்ளார். (நி-8)

# இராசிபலன்

03.04.2025
பங்குனி 26, திங்கட்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.52 மணிவரை

ரோகிணி பிற்பகல் 12.37 மணிவரை
சுபநேரம் 7.40-9.10 மணிவரை
இராகுகாலம் 1.40-3.10 மணிவரை
சஷ்டி விரதம்,

சந்திராஷ்டமம்-சுவாதி, விசாகம்

**வளவன்**

**மேஷம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் இடம்பெறலாம், வருமானம் பெருகி வளம் காணும் நாள்.

**துலாம்** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவுக்கு மீறிய விரயங்கள் ஏற்படலாம்.

**மகரம்** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களைப் பெறுவீர்கள், தொட்ட காரியங்கள் துளிர்விடும் நாள், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

**மிதுனம்** உறவினர் நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், கௌரவமான நாள்.

**மீனம்** இல்லத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**உங்களின் பாரங்களைக் கடவுளிடம் கொடுத்து விடுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாத இராசி பலன்கள்



கிரகநிலை - இராசியில் சந்திரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் புதன் , சனி - அயன சயன போக ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன் (வ), சூரியன் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 07-04-2025 அன்று செவ்வாய் பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10-04-2025 அன்று புதன் பகவான் லாப ஸ்தானத் 04-2025 அன்று புதன் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எடுத்துக்கொண்ட காரியத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் ஆர்வமுடன், இலட்சிய நோக்குடன் தக்கவிதத்தில் செயலாற்றி சாதனை புரியும் மேஷ இராசி நேயர்களே. நீங்கள் எடுத்த வேலைகளை சரியான நேரத்தில் முடிக்கும் வல்லவர். இந்த மாதம் சமூகத்தில் உயர்ந்தவர்கள் மத்தியில் புதியதொரு மரியாதையும் வரவேற்பும் உங்களுக்கு கிடைக்கப் பெறும். தாயின் உடல்நலத்தில் சிறு சிறு தொந்தரவுகள் உண்டாகிநல்ல பராமரிப்பின் காரணமாய் உடல்நலம்பெறும் கணவன், மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் உங்கள் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெற வருவார்கள்.

**உத்தியோகத்தர்கள்:** அரச தனியார் துறைகளில் உள்ளவர்களுக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகும். உங்க கற்றுக்கொண்டு பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழில் மேன்மை பெறுவார்கள். அதிக வேலைவாய்ப்புகளைப் பெற்று நிறைவான பொருளாதாரம் பெறுவார்கள். திருமண வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் பெண்களுக்கு சரியான வரன் அமையும்.

**கலைத்துறையினர்:** சினிமா, நாடகம், சின்னத்திரை, ஆடல், பாடல் போன்றவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள் தங்கள் தொழிலில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நிறைவான பொருளாதாரமும் அதிகமான புகழும் பெறுவார்கள்.




**அரசியல்துறையினர்:** உங்களின் நற்செயல்களின் வெளிப்பாடுகளால் வசதிகள் தன்னிறைவாய் கிடைக்கும்.

**அஸ்வினி:** இந்த மாதம் குடும்பத்தில் அமைதி ஏற்படும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**பரணி:** இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். ஏற்கனவே வியாபாரம் தொடர்பாக செய்து பாதியில் நின்ற பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பணவரத்து திருப்தியாக இருக்கும். புதிய பொறுப்புகள் ஏற்படலாம்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுதெம்பும் உற்சாகமும் தோன்றும். எதிர்பாராத உதவியால்

## எடுத்த காரியத்தை தைரியத்துடன் செய்து முடிக்கும் மேஷ இராசி நேயர்களே!

தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-04-2025 அன்று சூரிய பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 26-04-2025 அன்று ராகு பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-

ளுக்கு தேவையான பொருளாதாரம் நிறைந்த வகையில் கிடைக்கும். தொழிலதிபர்கள் புதிய சந்தை வசதிகளையும் அதிக பொருளாதார வரவுகளையும் பெறுவார்கள். தொழில் மேன்மைக்காக நிறுவன இட விஸ்தரிப்பு, புதிய கிளை தொடக்கம் போன்ற நற்பலன்களைப் பெறுவார்கள்.

**பெண்கள்:** கைத்தொழில் ஒன்றை

உயர்வைப்பெற்று புகழ்பெறுவீர்கள். அரசியலுடன் இணைந்த வகையில் தங்களது தொழில் வாய்ப்பை பயன்படுத்துபவர்கள் அரசு சார்ந்த அதிகாரிகளிடம் தகுந்த அனுசரணையுடன் நடந்து ஏற்றம் பெறுவீர்கள்.

**மாணவர்கள்:** தங்களது படிப்பினால் உயர்ந்த மதிப்பெண்பெற்று தகுதியான பணிகளைச்செய்யும் சிறந்த வாய்ப்புகளை பெறுவார்கள். தேவையான பொருளாதார


நன்மை ஏற்படும்.

**பரிகாரம்:** முடிந்த வரை செவ்வாய்க்கிழமை தோறும் அருகிலிருக்கும் முருகன் கோவிலுக்குச் சென்று வலம் வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 16, 17.

**அதிஷ்ட தினங்கள்:** 8, 9, 10.



கிரகநிலை - இராசியில் குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் புதன் , சனி - லாப ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), சூரியன் - அயன சயன போகஸ்தானத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 07-04-2025 அன்று செவ்வாய் பகவான் தன் வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத் திற்கு மாறுகிறார். 10-04-2025 அன்று புதன் பகவான் தொழில் ஸ்தானத் தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகி றார்.30-04-2025 அன்று புதன் பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** கனிவே பெருமை என்பதற்கேற்ப கவர்ச்சிகரமான தோற்றமும் கனிவான பேச்சும் தெளிவான சிந்தனையும் கொண்டு அனைவராலும் விரும்பப்படும் ரிஷப இராசி நேயர்களே. இந்த மாதம் நிலுவையில் இருந்த பணம் உங்களுக்கு திரும்பக் கிடைக்கும் கடன் சுமைகள் நீங்கி நிம்மதியான வாழ்க்கை முறைகள் உண்டாகும். சமூக காரியங்களில் தலையிட்டு திறம்பட பணியாற்றி நற்பெயர் பெறுவீர்கள். அரசு சார்ந்த மற்றும் தனியார் வங்கிகளின் உதவிகளை பெற்று வீடு மற்றும் மனைகளை வசதிக் கேற்ப மாறுதல் செய்வீர்கள். திருமணம் ஆனவர்களுக்கு புத்திரப் பேறு கிடைக்க பெறும். தம்பதிகளிடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

**உத்தியோகத்தர்கள்:** துறை சார்ந்த பணியாளர்களிடம் நீங்கள் காட்டி வந்த கடுமையான போக்கு மாறி உங்கள் செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும். இதனால் நற்பெயர் பெறுவதுடன் ஊழியர் நம்பிக்கையும் கிடைக்கும்.

**கலைத்துறையினர்:** தங்கள் திறமையை நன்கு பயன்படுத்தி ரசிகர்களிடம் புகழ் பெறுவதுடன் பொருளாதார வகையிலும் நிறைந்த முன்னேற்றம் பெறுவார்கள். புதிய கோயில்கள் நிர்மாணிப்பு பணிகளில் புதிய ஒப்பந்தங்கள் பெறுவார்கள்.

**அரசியல்வாதிகள்:** மக்களுக்காக சேவை செய்வதில் சில காலம் மந்தமாக செயற்பட்டு வந்தவர்கள் எதிர்கால கனவுகளை மனதில் சுமந்து புதிய உத்வேகத்துடன் பணி




யாற்றுவார்கள். ஆன்மிக எண்ணங்களும் நாத்திக செயற்பாடுகளும் அதிகரிக்கும்.

**மாணவர்கள்:** தங்கள் படிப்பில் கவனம் செலுத்தி முதல்தர மாணவராக தேர்ச்சி பெறு

யங்கள் வெற்றிகரமாக நடந்து முடியும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள்.

**ரோகினி:** இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப விடயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும்போது கவனமாக பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின் போதும் கவனம் தேவை.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தங்களுக்கு கீழ் இருப்பவர்களால் இலாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். தேவையான பொருட்கள் கையிருப்பு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாரத இடமாற்றம் ஏற்படலாம்.

## கனிவான பேச்சும் தெளிவான சிந்தனையும் கொண்ட ரிஷப இராசி நேயர்களே!

ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-04-2025 அன்று சூரிய பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போகஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று ராகு பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் பஞ்சம

களின் எதிர்பாராத உதவிகளும் உங்கள் மனதை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும்.

**பெண்கள்:** சீரான வாய்ப்புகள் வந்தாலும் அவ்வப்போது குழப்பமான மன நிலையும் இருக்கும். முன்யோசனையுடன் திட்டமிடல் அவசியம். குழந்தைகளின் கல்வியில் [illegible]

வார்கள். சக மாணவர்களின் பாடம் தொடர்பான சந்தேகங்களுக்கு உதவுவீர்கள்.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் திறமையான பேச்சின் மூலம் எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள். எதிர்ப்புகள் குறையும். பணவரத்து கூடும். தடை நீங்கி காரி

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன்.

**சந்திராஷ்டமதினங்கள்:** 18, 19, 20.

**அதிஷ்ட தினங்கள்:** 11, 12.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் மக்களுக்காக இலங்கை அரசு நிதியுதவி



(கொழும்பு)

மியன்மாரில் நடைபெற்று வரும் நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு உதவுவதற்காக, இலங்கை அரசாங்கம் 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை மனிதாபிமான உதவியை வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக பிரதி வெளியுறவு அமைச்சர் அருண் ஹெம்சநாத்ரா அறிவித்தார். மியன்மார் ஒன்றியக் குடியரசின் துணைப் பிரதமருடனான அருண் ஹெம் சநாத்ராவின் சந்திப்பின் பின்னர் இந்த அறிவிப்பு வந்துள்ளது. (நி-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.அரியரத்தினம் திவ்யராஜ்

(Dip.in.Teach, B.A. PGDE (Distinction) M.Ed)

கடந்த 20.03.2025 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது முதுகல்விமாணி பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று மேன்மையுற வாழ்த்துகின்றோம்

(990)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.தர்மலிங்கம் சிறீகரன்- SLTS-I

B.A (Spl) Pol.sc, PGDE (Merit) M.Ed (Hons), Dip.in counselling (R)



திருமதி.துளசினி விதுசன்

B.A in English, HND in English, Teacher trained in English, B.Ed in English

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பட்டமளிப்பு விழாவில் M.Ed, B.A பட்டங்களைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(C-2600)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 4/5, பாடசாலை வீதி, வட்டாரம்-06

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 06 பாடசாலை வீதியிலுள்ள இல: 4/5 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர்மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு சொரியலாக **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரியும், வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியமும், வேலுப்பிள்ளை பரமசாமியும், வேலுப்பிள்ளை இராசதுரையும்** சொந்தகாரர்களாகவிருந்து குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1206/03.06.1987ஆம் **இலக்க உறுதியால் பிரிவிடல்** செய்து நிந்தமாக்கப்பட்ட தத்தமது ஆதனங்களுக்கு சொந்தமும் உரித்துமுடையவர்களானார்கள்.

**தம்பையா வேலாயுதம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5946/22.05.2004 ஆம் **இலக்க உறுதியால்** குறித்த **வேலுப்பிள்ளை பரமசாமி** ஆகியவரிடமிருந்து குறித்த நிந்தமாக்கப்பட்ட ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**பரமசிவம் ரவியும் பெண் செல்வரூபியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3788/30.01.2012ஆம் **இலக்க உறுதியால்** குறித்த **தம்பையா வேலாயுதம்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**தர்மலிங்கம் பெண் ஜெயரதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5730/29.07.2023 ஆம் **இலக்க உறுதியால்** குறித்த **பரமசிவம் ரவியும்,** ரவி **பெண் செல்வரூபியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தர்மலிங்கம் பெண் ஜெயரதி** ஆகியவர் ஆதனப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தர்மலிங்கம் பெண் ஜெயரதி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (322)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1996- இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 17
உயரம் : 5' 7"
தகைமை/தொழில்:A/L .தபால் ஊழியர்
எதிர் பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15286

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: சித்திரை
கிபா-10 1/2
உயரம்:5' 6"
தகைமை/தொழில்- HNDA, Assistant Engineer
எதிர்பாப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15287

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 6 இல் சூரி செவ்
உயரம்:5' 5"
தகைமை/தொழில்: Diploma,Travels
எதிர்பாப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15288

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு -1996 - இந்து
நட்சத்திரம் - பூரம் 8 இல் செவ்
கி.பா-51 3/4
உயரம் : 5' 2"
தகைமை/தொழில்: BEng
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15202

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 10இல் சூரி செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்: OpticalStaff(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15204

பிறப்பு -1998 - இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:20
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BBM, Following MSc, Bank
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15206

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## குஜராத்தில் பட்டாசுத் தொழிற்சாலையில் வெடி விபத்து- 13 பேர் உயிரிழப்பு


(டில்லி)

குஜராத் மாநிலம் பனஸ்கந்தா மாவட்டம் டீசாப் பகுதியில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் இடம்பெற்ற வேளை குறித்த தொழிற் சாலையில் 15இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன் போது திடீரென ஏற்பட்ட வெடிவிபத்தினால் பட்டாசுத் தொழிற்சாலை முழுவதும் தீ மளமள வெனப் பரவியதோடு தொழி ற்சாலையின் மேற்கூரை யும் இடிந்து விழுந்து தரைமட்டமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்தில் 13 பேர் சம்பவ இடத்திலேயே உயி ரிழந்துள்ளனர் எனவும், 4 பேர் காயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைக ளைப் பொலிஸார் முன்னெ டுத்துவருகின்றனர். (ரி-8)



# மியன்மார் நிலந

## 10 ஆயிரம் கட்டடங்கள்

### உலக சுகாதார அமைப்

(பாங்கொங்)

**மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10 ஆயிரத் துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

இதில் பெரும்பாலான கட்டடங்கள் முற்றிலும் சேத மடைந்துள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் கனரக இயந்திரங்கள் இல்லாத தால் மீட்புப்பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அடுக்கு மாடிக் குடியிருப்பு இடிபாடு களில் இருந்து ஒரு குழந்தை, கர்ப்பிணிப் பெண் உட்பட 4 பேரை 60 மணி நேரத் துக்குப் பிறகு சீன மீட்புப் பணியாளர்கள் குழு மீட்டது.


இந்த நிலையில் மியன் மாரில் நிலநடுக்கத்தால் தண்ணீர் விநியோகம், சுகாதார உட்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுவாசத் தொற்றுகள், தோல் நோய்கள், டெங்குக் காய்ச்சல் போன்ற நோய்க் கிருமிகளால் பரவும் நோய்கள், தட்டம்மை போன்ற தடுப்பூசி மூலம் தடுக்கக்



கூடிய
பாதிப்பு
அதிகார

## பாகிஸ்தானில் நிலநடுக்கம்




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அந் நாட்டு நேரப்படி நேற்று புதன்கிழமை அதிகாலை 2.58 மணிக்கு 4.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித் துள்ளது.

பலுசிஸ்தானில் உள்ள உத்தாலில் இருந்து கிழக்கு- தென்கிழக்கே 65 கிலோ மீற்றர் தொலை வில், 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கத்தின் மையம் அமைந்திருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.


**நிலநடுக்கத்தால் இது வரை, காயங்கள் அல்லது** உயிரிழப்புகள் குறித்த தக வல்கள் எதுவும் இல்லை.

நிலநடுக்கம் உணரப் பட்டதால் குடியிருப் பாளர்கள் பீதியில் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தனர்.

சில நாட்களுக்கு முன்பு, கைபர் பக்துன்க் வாவில் 5.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் அதிர்வு கள் ஸ்வாட், சித்ரால் மற் றும் கைபர் பக்துன்க்வா வின் பிற பகுதிகளிலும் உணரப்பட்டன.

**இந்த நிலநடுக்கத்தின் ஆழம் 166 கிலோ மீற்றர் களாகப் பதிவாகியுள்ளது. அதன் மையம் இந்துகுஷ் மலைத்தொடரில் அமைந் துள்ளது.** (ரி-8)

## ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு



(ரெய்க் ஜாவிக் )

ஐஸ்லாந்து தலைநகரின் தெற்கே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எரி மலை ஒன்று வெடித் துள்ளது.

எரிமலை வெடிப்பி னால் ஆரஞ்சு மற்றும் சிவப்பு நிறங்களில் எரி மலைக் குழம்பு மற்றும் புகை வெளியேறியுள் ளது.

இது சுற்றுலாப் பயணி கள் மற்றும் குடியிருப்பாளர் களை வெளியேற்ற தூண்டியுள்ளது. எனினும் விமானப் போக்குவரத்து வழமை போல் இடம்பெற்று வருகிறது.

ஏராளமான பனிப்பாறை கள் மற்றும் எரிமலைகள் சூழ்ந்த வட அந்திலாந்திக் தீவான ஐஸ்லாந்தில் 2021 ஆம் ஆண்டு முதல் ரெய்க் ஜாவிக் நகரின் தெற்கே 11 எரிமலைகள் வெடித்துள் ளன. சுமார் 800 ஆண்டு களுக்குப் பின்னர் செயலற்று இருந்த எரிமலைகள் செயற்பட ஆரம்பித்துள்ளன.

எரிமலை வெடிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐஸ்லாந்து வளிமண்டல வியல் அலுவலகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள் ளது.

இந்த எரிமலை வெடிப்பு கிரைண்டாவிக் மீன்பிடி நகரத்திற்கு அருகிலுள்ள பாதுகாப்புத் தடைகளை ஊடுருவியுள்ளது. முன்னர் இடம்பெற்ற வெடிப்பு சம்பங்களுக்குப் பின்னர் திரும்பி அவ்விடத்துக்குச் சென்ற குடியிருப்பாளர் களை வெளியேற்ற தூண்டியதோடு, அங்கு ஓராண்டுக்கு மேலாக பெரும் பாலான வீடுகள் வெறுமை யாக உள்ளன.

தற்போது பாதுகாப்பு தடைக்குள் எரிமலைக் குழம்பு வருகிறது. ஆனால் இதுவரை இது மிகவும் குறைந்தளவான வெடிப்பாக இருப்பதாக நோர்டிக் எரிமலை மையத்தின் தலைவர் ரிக்கே பெடர்சன் குறிப்பிட்டுள்ளார்.

பூமியின் மேலோட்டத் தில் உள்ள நீண்ட விரிசல் களிலிருந்து ஒரு எரிமலை திறப்புக்குப் பதிலாக எரிமலைக்குழம்பு வெளி யேறுவதால் வகைப்படுத் தப் படும் பிளவு, வெடிப்புகள் பல தசாப்தங்களாக அல்லது பல நூற்றாண்டுகளாக மீண்டும் மீண்டும் நிகழக் கூடும் என ஐஸ்லாந்து நிபுணர்கள் கணித்துள் ளனர். (ரி-8)

## AI
## மன



செயற்
நுட்பத்தில்
துறைகள்
வேலை
உருவாக
செல்வந்
எச்சரிக்

அத்து
மட்டுமே
நடைமுறை
களில்
என்றும்
ளார்.

இது
தெரிவிக்
நுண்ண
வளர்ச்சி
மனிதர்
இல்லாத

இதன
குறைபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# லநடுக்கம்;
# கள் தரைமட்டம்
## மைப்பு தெரிவிப்பு



கூடிய நோய்கள் ஆகியவற்றுக்கான பாதிப்பு அதிகரித்து வருவ தாக அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

இதனைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (நி-8)

## மலேசியாவில் திடீரென வெடித்த எரிவாயுக் குழாய்
# வானுயர எழும்பிய தீப்பிழம்புகள்



(கோலாலம்பூர்)

மலேசியாவில் எரிவாயுக் குழாய் வெடித்து சிதறியதில் ஏற்பட்ட விபத்தில், வானுயர தீப்பிழம்புகள் எழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக வெளியாகி இருக்கும் காட்சிகள் காண் போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மலேசியா கோலாலம்பூருக்கு வெளியே சிலாங்கூர் மாநிலத்தில் உள்ள புத்ரா ஹைட்ஸ் பகுதியில் அமைந்துள்ள எரிவாயுக் குழாய் நேற்று வெடித்ததால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

Petronas என்ற தேசிய எண்ணெய் நிறுவனம், தங்கள் நிறுவனத்தின் எரிவாயுக் குழாயில் காலை 8.10 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது.

மேலும், பாதிப்படைந்த குழாய்உடனடியாக மூடப்பட்டதாகவும் அறிவித்தது. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீ விபத்து ஏற்பட்ட இடத்திற்கு அருகில் இருந்த மூன்று எரிவாயு நிரப்பும் நிலையங்களும் மூடப்பட்டதாக அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்தான வீடியோ வெளியாகியுள்ளது. இவை காண்பதற்கு அணுகுண்டு வெடித்து சிதறியது போன்று உள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தற்போது அதற்கான பணி நடைபெற்று வருகிறது.

இந்த தீ விபத்தில் குறைந்தது 49 வீடுகள் சேதமடைந்ததாகவும், இதுவரை 112 பேர் தீக் காயமடைந்துள்ளதாகவும், 82 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், 63 பேர் தீக்காயங்களால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தப் பயங்கர தீ விபத்தில் அருகில் இருந்த வீடுகளுக்கும் தீ பரவியுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு வரும்நிலையில், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 20 மாடிகட்டடம் ஒன்றின் அளவில் வானுயர எழும்பிய தீப்பிழம்புகள் காண்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (நி-8)

# AI இன் பாரிய வளர்ச்சியால் மனிதர்களுக்கு ஆபத்து



செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியால் பல்வேறு துறைகளிலும் மனிதர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழல் உருவாகக்கூடும் என உலகின் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான பில் கேட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், வாரம் இரு நாட்கள் மட்டுமே வேலை நாட்கள் என்கிற நடைமுறை இன்னும் பத்தாண்டுகளில் வழக்கத்தில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியால் பல்வேறு துறைகளிலும் மனிதர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத சூழல் உருவாகக்கூடும்.

இதனாலேயே வேலை நாட்களும் குறையும். இதற்கு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியே காரணம்.

பல துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கோலோச்ச தொடங்கிவிட்டது.

இப்போது இணையத்தில் பிரபலமாகி வரும், 'ஜிப்லி' வகை கார்ட்டூன் சித்திர படங்களும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியின் விளைவே.

தொழில் நுட்பத்தை நம்பியே சுழலும் இந்த நவீன யுகத்தில், அடுத்த 10 ஆண்டுகளில் வேலை வாய்ப்புக் குறைந்துவிடும் என்பதையே பிரதிபலிக் கிறது" என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# நாங்கள் மீண்டும் பறப்போம் சுனிதா வில்லியம்ஸ் உறுதி



(வோஷிங்டன்)

மீண்டும் ஸ்டார்லைனர் விண்கலத்தில் பறப்பீர்களா என்று கேட்டபோது, நாங்கள் மீண்டும் பறப்போம் என சுனிதா வில்லியம்ஸ் உறுதி அளித்தார்.

கடந்தாண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்துக்கு பயணமானார். அவருடன் விண்வெளி வீரர் புட்ச் வில்மோரும் சென்றார். எட்டு நாட்களுக்கான பயணம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக 9 மாதங்களாக நீடித்தது. சமீபத்தில் இருவரும் பத்திரமாக பூமி திரும்பினர்.

இந்நிலையில், விண்வெளி மையத்தில் இருந்து திரும்பிய பிறகு, நாசா விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் முதல் முறையாக ஊடகங்களுக்கு உரையாற்றினர்.

மீண்டும் ஸ்டார்லைனர் விண்கலத்தில் பறப்பீர்களா என்று கேட்டபோது, இரு விண்வெளி வீரர்களும் மீண்டும் பறப்போம் என தெரிவித்தனர்.

அப்போது சுனிதா வில்லியம்ஸ் கூறியதாவது, ஸ்டார்லைனர் மிகவும் திறமையான விண்கலம். சில விடயங்களை சரிசெய்ய வேண்டும். இது நிறைய த ி ற ன ் க ை ள க ் கொண்டுள்ளது. பயிற்சி எங்களைப் புறப்படத் தயார்படுத்தியது. புதிய சவால்களுக்குத் தயாராக எங்களுக்கு உதவியது.

என் தந்தையின் தாய் நாடான இந்தியாவுக்கு கண்டிப் பாக செல்வேன். விண்வெளி யில் இருந்து பார்க்கும்போது இந்தியா அற்புதமாக இருந்தது. என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவல் தொழிலாளர்களுக்கு உயிர் காப்புறுதி

## அரசாங்கம் புதிய திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் கித்துள், தென்னை மற்றும் பனை தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு உயிர் காப்புறுதித் திட்டமொன்றை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கமத் தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் புதுப்பிக்கக்கூடிய வகையில் திடீர் விபத்து உயிர் காப்புறுதி திட்டத்தை அமுல் படுத்துவதற்கு தற்போது திட்ட மிடப்பட்டுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் 500,000 ரூபாய், 1,000,000 ரூபாய் மற்றும் 2,000,000 ரூபாய் என்ற காப்புறுதி தொகைகள் மரணம் அல்லது முழுமையான ஊன முற்ற நிலை ஏற்படும் போது வழங்கப்படும்.

மேலும், தற்காலிக ஊனமுற்ற நிலைகளிலும் திடீர் விபத்துகளால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போதும் இந்தக் காப்புறுதிப் பலன்கள் வழங்கப்படும் என்று சபை தெரிவித்துள்ளது.

இந்தக் காப்புறுதி பாதுகாப்பை 2,000 ரூபாய், 4,000 ரூபாய், 8,000 ரூபாய் போன்ற குறைந்த ஆண்டு பிரீமியம் மட்டங்களின் கீழ் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கு வதற்கு கமத் தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை திட்ட மிட்டுள்ளது. (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 600 |
| தக்காளி | 450 | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 220 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 400 |
| கரட் | 600 | 500-650 | 700 | 700 |
| பூசணி | 240 | 160 | 160 | 200 |
| புடோல் | 180 | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 250 | 100 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 250 | 200 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 250 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 250 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 280 |
| பீற்றூட் | 250 | 280 | 250 | 400 |
| கறிமிளகாய் | 800 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 2000 | 3000 |
| போஞ்சி | 600 | 550 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 200 | 500 |
| கீரை - 1 பிடி | 140 | 80-100 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 300 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 280 | 160-200 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 400 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 80 |
| ஈரப்பலா | - | - | 100 | 250 |

## இன்று ஒரு தகவல் 349

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



# பிரம்மம்!

பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்று ஒரு பெரியவர் பேசினார் ஒரு கோவிலிலே.

தைத்திரீய உபநிஷத்து அப்படிச் சொல்லுதாம். இதைக் கேட்கும் போது நமக்கு ஒரு சந்தேகம் வரும்.

அது எப்படி? பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான். சிங்கத்தை அறிந்தவன் சிங்கம் ஆகிறான். இப்படிப்பட்ட சந்தேகம் வருவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

இது இயற்கை. இதற்கு பெரியவரே பதில் சொல்கிறார்.

சிங்கம் வேறு. நாம் வேறு. அதனாலே பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான் என்பது விளக்கம்.

இதை விளக்குவதற்கு ஒரு உபநிஷத்துக் கதை இருக்கிறது. நமக்கு தெரிந்த கதைதான்.

ஆனால் அதை வேறு அர்த்தத்திலே விளையாட்டாக சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சமயம் ஒரு பத்து நண்பர்கள் ஒரு காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். குறுக்கே நதி. அதைக் கடந்து அடுத்த பக்கம் செல்ல வேண்டும். எல்லோரும் ஒரு வழியாக அதைக் கடந்து சென்று விட்டார்கள்.

அங்கே போய் சேர்ந்ததும் எல்லோரும் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டார்களா என்று எண்ணிப் பார்க்கிறான் அந்தக் கூட்டத் தலைவன்.

அவர்கள் மொத்தம் பத்துப்பேர். ஆனால் இவன் எண்ணிப் பார்க்கும் போது 9 தான் வருகிறது. ஏனென்றால் அவன் தன்னை விட்டு விட்டான். எதிரிலே நிற்கிறவர்களை மட்டுமே எண்ணினான். ஐயோ பத்தாவது ஆள் எங்கே என்று பதறினான்.

சரி நீ இரு நான் எண்ணுகிறேன்! என்று சொல்லி விட்டு இன்னொருவன் வந்து எண்ணினான்.

அவனும் தன்னை விட்டு எண்ணினான். 9 தான் வந்தது. எல்லோரும் கத்த ஆரம்பித்தார்கள்.

அந்த சமயத்தில் ஒரு பெரியவர் அந்தப் பக்கமாக வந்தார். என்ன விடயம் என்று விசாரித்தார்.

பத்தாவது ஆளை ஆறு அடித்துக் கொண்டு போய் விட்டது என்று சொல்லி அழுதார்கள்.

சரி அழாதீர்கள் என்று சொல்லி அந்தத் தலைவனைப் பார்த்து இப்படி வாருங்கள் என்றார்.

இப்போது என் முன்னால் ஒருதரம் எண்ணுங்கள் என்றார்.

ஒன்று இரண்டு என்று ஆரம்பித்து 9லே வந்து முடிக்கிறான். உடனே பெரியவர் நீ தான் அந்தப் பத்தாவது ஆள் என்கிறார்.

நாம் தான் அது. நாம் தான் என்னை வேறு எங்கேயோ தேடிக் கொண்டிருந்தோம். அந்தப் பிரம்மம் நாம் தான். இப்படி ஒரு பெரிய உண்மையை விளக்குவதற்காக அப்படி ஒரு கதை சொன்னார்.

ஆனால் அதை நாம் வேறு விதமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம் எப்படித் தெரியுமா?

ஒரு ஆற்றங்கரையிலே ஒரு பத்து பேர் முழித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கமாக ஒருவன் வந்தான். ஏன் இப்படி முழிக்கிறீர்கள் என்று கேட்டான்.

எங்களுக்கு நீச்சல் தெரியாது. நான் அழைத்துச் செல்கின்றேன். நீங்கள் எல்லாம் அக்கரைக்கு போய் சேர்ந்தவுடனே ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் 10 ரூபாய் எனக்கு கொடுக்க வேண்டும் என்றான். சரி என்று ஒத்துக் கொண்டார்கள்.

இவன் ஒவ்வொருத்தராக கையைப் பிடித்து மெதுவாக ஆற்றிலே இறக்கி அழைத்துக் கொண்டு போனான்.

9 பேரை கரை சேர்த்து விட்டான். பத்தாவது ஆள் பாதி ஆற்றிலே போய்க் கொண்டிருக்கும் போது திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. பிடி நழுவிப் போய்விட்டது. கையை விட்டுவிட்டான். வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. அழைத்துக் கொண்டு வந்தவன் நீச்சலடித்து தட்டுத்தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

கரையிலே இருந்தவர்களுக்கு இந்த விடயம் தெரியாது. இருந்தாலும் இவன் உடல் முழுவதும் நனைந்து அதிகமாக மூச்சு வாங்கி நின்று கொண்டிருந்தான். ஏன் இப்படி மூச்சு வாங்குகிறாய். என்ன விடயம் என்று கேட்டார்கள். அது ஒன்றுமில்லை நீங்கள் கொடுக்க வேண்டிய பத்து ரூபாயிலே ஒரு ரூபாய் குறைந்து விட்டது. அவ்வளவுதான் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய விளையாட்டுப் போட்டி

## யாழிலிருந்து 17 வீரர்கள் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய விளையாட்டு போட்டியில், யாழ்ப்பாணத்தில் இருந்து 17 வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கொழும்பு ஹோகாஹம விளையாட்டு மைதானத்தில் இன்று வியாழக்கிழமை குறித்த விளையாட்டு போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில், யாழ்ப்பாணத்தில் இருந்து 17 வீரர்கள் 20 விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக நேற்று புதன்கிழமை கொழும்பிற்கு சென்றனர்.

இதன் போது, யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு வீரர்களை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

இந் நிகழ்வில், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், மாவட்ட சமூக சேவைகள் தி. உமா சங்கர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பங்குபற்றினார்கள். (நி-8-33)

# விவசாயக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தம்பசிட்டி சதாவதானி மக்கள் பொது நல நிதியத்தினால் நடத்தப்படும் 'விவசாயக் கருத்தரங்கு' எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை, தம்பசிட்டி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஓய்வு பெற்ற உதவிப் பிராந்திய முகாமையாளர் ஜெ.சத்தியேந்திரன் வளவாளராகக் கலந்து கொண்டு தென்னைகளைத் தாக்கும் வெண்ஈக்களைக் கட்டுப்படுத்துவோம், இயற்கையான முறையில் பீடைகளை ஒழிப்போம் மற்றும் நஞ்சற்ற விவசாயம் காப்போம் ஆகிய கருப்பொருள்களில் கருத்துரையை வழங்கவுள்ளார் என சதாவதானி மக்கள் பொதுநல நிதிய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

# பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 100 ஆவது அவதார தினம்



(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 100 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு மானிப்பாயில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி பாடசாலையினால் கலை நிகழ்வொன்று GMJ திருமண மண்டபத்தில் (மானிப்பாய்) பிற்பகல் 2.50 மணிக்கு நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீ திருநாவுக்கரசு அருணோதயனும் (Alumnus-SSSIHI, Prashanthi Nilayam Campus, Puttaparthi Director of Enterprise-Risk Management, Canadian Bank, Canada) கௌரவ விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)



உலக சுகாதாரநாளை முன்னிட்டு சிறப்பு ஒன்று கூடல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று புதன்கிழமை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

அமெரிக்க சான்போட் (SANFORD) மருத்துவ கல்லூரியின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை பேராசிரியரும் வைத்திய நிபுணருமாகிய தவம் தம்பிப்பிள்ளை கலந்து சிறப்பித்தார். (படம்:சிவசாந்தன்)

# நிர்வாகத் தெரிவு


(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு ஓய்வூதியர் சங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான நிர்வாகக் குழுத் தெரிவு கடந்த மார்ச் 22 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைவர் மு.விக்னேஸ்வரன், செயலாளர் அ.அருந்தவநேசன், பொருளாளர் இ.இராசசேகரம், உபதலைவர் நா.ஜீவன், உப செயலாளர் இ.குணநாதன், நிர்வாக உறுப்பினர்கள் சே.இராஜரட்ணம் மற்றும் செல்வி வ.சிவலீலாதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(நி-8)



மன்னார் மறைமாவட்டத்தின் முன்னை நாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று புதன்கிழமை பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகரபகுதியில் இடம்பெற்றது.







வலி கிழக்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக் கூட்ட நிகழ்வு கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலர் ச.சிவசிறி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும் கௌரவிக்கப்பட்ட ஓய்வூதியர்களையும் படத்தில் காணலாம்.

# புத்தாண்டு சிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

51 ஆவது காலாட் படையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தமிழ் சிங்கள புத்தாண்டு சிறப்பு விழா (2025)' எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.ரியூன்ஸ் வழங்கும் இன்னிசை இரவு நிகழ்வும் அன்றையதினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணி தொடக்கம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)



மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலய மஹோற்சவம் நேற்றைய தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 738





"அக்கா! இதோ உன் தோழியை வாங்கிக்கொள்! கொடும்பாளூர் வீரவேளிர் குலத்தில் இந்தப் பெண் எப்படித் தான் பிறந்தாளோ, தெரியவில்லை!" என்றான்.

"தம்பி! இது என்ன காரியம் செய்தாய்? கல்யாணம் ஆகாத கன்னிப்பெண்ணை நீ இப்படிக் கையினால் தொடலாமா?" என்றாள் குந்தவை. "கடவுளே! அது ஒரு குற்றமா? பின்னே, இவள் தண்ணீரில் தலை கீழாக விழுந்து முழுகியிருக்க வேண்டும் என்கிறாயா? நல்ல வேளை! இவளை நான் தாங்கிப் பிடித்தது இவளுக்குத் தெரியாது. விழும்போதே மூர்ச்சையாகிவிட்டாள்! இந்தா, பிடித்துக்கொள்!" என்றான் அருள்வர்மன்.

வானதி கலகலவென்று சிரித்தாள். சிரித்துக்கொண்டே அவன் கரங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கரையில் குதித்தாள். "அடி கள்ளி! நீ நல்ல நினைவோடுதான் இருந்தாயா?" என்றாள் குந்தவை.

"கண்ணை மூடிக்கொண்டு மூர்ச்சையடைந்ததுபோல் ஏன் பாசாங்கு செய்தாள் என்று கேள், அக்கா!" என்றான் பொன்னியின் செல்வன். "நான் ஒன்றும் பாசாங்கு செய்யவில்லை, அக்கா! இவர் என்னைத் தொட்டதும் எனக்குக் கூச்சமாய்ப் போய்விட்டது. வெட்கம் தாங்காமல் கண்களை மூடிக்கொண்டேன்!"

"அது எனக்கு எப்படித் தெரியும்? மூர்ச்சை போட்டு விழுவது உன் தோழிக்கு வழக்கமாயிற்றே என்று பார்த்தேன்."

"இனிமேல் நான் மூர்ச்சை போட்டு விழமாட்டேன். அப்படி விழுந்தாலும் இவர் இருக்குமிடத்தில் விழமாட்டேன். அக்கா! இன்று இவருக்கு நான் செய்த உதவியை மட்டும் இவர் என்றைக்கும் மறவாமலிருக்கட்டும்!" என்றாள் வானதி.

"என்ன? என்ன? இவள் எனக்கு உதவி செய்தாளா? அழகாயிருக்கிறதே?" என்றான் அருள்வர்மன். குந்தவையும் சிரிது திகைப்புடன் வானதியை நோக்கி "என்னடி சொல்கிறாய்? என் தம்பி உனக்குச் செய்த உதவியை என்றும் மறக்கமாட்டேன் என்று சொல்கிறாயா?" என்றாள்.

"இல்லவே இல்லை. அக்கா! நான்தான் உங்கள் தம்பிக்குப் பெரிய உதவி செய்தேன். இவர் அதற்காக என்னிடம் என்றைக்கும் நன்றி செலுத்தியே தீரவேண்டும்!"

"நான் இவளைக் கால்வாயில் விழாமல் காப்பாற்றியதற்காக இவளுக்கு நான் நன்றி செலுத்த வேண்டுமா? உன் தோழிக்கு ஏதாவது சித்தக் கோளாறு உண்டா அக்கா?" என்றான் பொன்னியின் செல்வன்.


"என் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது! இவருக்குத்தான் மனம் குழம்பியிருக்கிறது. புரியும்படி சொல்லுகிறேன், இவர் சிறு வயதில் ஒரு சமயம் காவேரியில் விழுந்தார் என்றும், ஒரு பெண் இவரை எடுத்துக் காப்பாற்றினாள் என்றும் சொன்னீர்கள். மறுபடி இவர் கடலில் விழுந்து தத்தளித்தார்! அங்கேயும் ஒரு ஓடக்காரப் பெண் வந்து இவரைக் காப்பாற்றினாள். இப்படிப் பெண்களால் காப்பாற்றப்படுவதே இவருக்கு வழக்கமாகப் போய்விட்டது. அந்த அபகீர்த்தி மறைவதற்கு நான் இவருக்கு உதவி செய்தேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மயிலின் அழகு



ஒரு பெரிய காட்டில் ஒரு பறவைக் கூட்டம் இருந்தது. அதில் சில குட்டி இளம் வயதுப் பறவைகளும் இருந்தன, அந்தக் குட்டி பறவைகள் கூட்டத்தில் ஒரு குட்டி மயிலும் இருந்தது.

அந்தக் குட்டி மயில் கூவுறது மிகவும் எரிச்சலாக இருந்தது. எல்லா குட்டிப் பறவைகளும் குட்டி மயிலைக் கிண்டல் செய்ய தொடங்கின. அதனால் அந்த மயிலுக்கு ரொம்ப வருத்தமாக போய் விட்டது. எப்ப பார்த்தாலும் தான் மட்டும் மட்டம் தட்ட படுவதை குட்டி மயிலால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ரொம்ப வருத்தப்பட்ட குட்டிமயில் அங்கு வாழ்ந்து வந்த வயதான புறாவிடம் போய் தன்னுடைய வருத்தத்தைச் சொல்லியது. சின்னப் பறவைகளின் சண்டையை நினைத்து அந்த வயதான புறாவுக்கு ரொம்ப சிரிப்பு வந்துவிட்டது. அந்தக் குட்டி மயிலுக்கு தன்னம்பிக்கை வர வேண்டும் என நினைத்த புறா , அழகான குரலை வைத்திருக்கும் குயிலைப் பற்றி சொல்லியது. குட்டி மயிலே நீ என்றைக்காவது குயில் பாடிக் கேட்டுருக்கியா என்று கேட்டது. அதைக் கேட் குட்டி மயில் ஆமாம் நான் கேட்டிருக்கேன். குயில் ரொம்ப அழகாகப் பாடும் அதோட குரல் ரொம்ப அழகாக இருக்கும் என்று சொல்லியது.

உடனே அந்தக் குட்டி மயிலை குயிலிடம் கூட்டிக் கொண்டு போய் , அழகாகப் பாடுற குயிலே உனக்கு வாழ்க்கையில் வருத்தமே இல்லையா என்று கேட்டது. உடனே அந்தக் குயில் சொல்லியது, அழகாகப் பாடி என்ன பயன். என்னால் அழகாக நடனமாட முடியாது. வேகமாகப் பறந்து இரை தேட முடியாது. என்னுடைய உருவம் வேற சின்னது என்று தன்னுடைய குறைகளை அடுக்கிக் கொண்டே போனது. இதைக் கேட்ட புறா சொல்லியது, பார்த்தியா குரல் நல்லா இருந்தா நல்லா வாழலாம் என்று நீ நினைக்கிறாய். ஆனால் குரல் நல்லா இருக்குற பறவையே ரொம்ப வருத்தத்தில் இருக்கு. உனக்கு அது மாதிரி வாழ வேண்டுமா என்று கேட்டது.

இதைக் கேட்ட குட்டி மயிலுக்கு நல்ல குரல் மேல் இருந்த ஆசையே போய்விட்டது . அப்போது தான் குயிலிடம் கேட்டது உனக்கு எந்தப் பறவை மாதிரி இருந்தா நல்லா இருக்கும் என்று ஆசை என்று. அதற்கு அந்தக் குயில் சொல்லியது எனக்கு மயில் மாதிரி மாறணும் என்று ஆசை என்று சொல்லியது.

இதைக் கேட்ட குட்டி மயில் , ஏன் அந்த குயில் என்ன மாதிரி மாறணும் என்று கேட்டது. எனக்கு நல்ல குரல் இல்லையே என்று சொல்லியது. அதற்கு அந்தப் புறா சொல்லியது உனக்கு குறை என்று நினைக்குறது, இன்னொரு பறவைக்கு இருக்கின்ற மாதிரி, மற்றப் பறவைகளுக்கு இருக்காத நல்ல விடயங்கள் உனக்கு இருக்கு.

நீ குட்டியாக இருப்பதனாலே உனக்கு தோகை இன்னும் வளரவில்லை. நீ பெரியவனாக வளர்ந்ததும் உனக்கு மிக அழகான தோகை வரும், எல்லாப் பறவைகளும் உன்னுடைய அழகைப் பார்த்து கொண்டாடுவார்கள்.

அதனால் இன்றைக்கு நீ இருக்குற நிலைமையைப் பார்த்து கிண்டல் செய்பவர்களை விட்டு விட்டு நல்ல மனதோடு, நல்ல தன்னம்பிக்கையோடு வளர வேண்டும் என்று சொல்லியது புறா. பெரிய பறவையான புறாவின் அறிவுரையைக் கேட்ட குட்டி மயில் தைரியமா வாழ ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது ஒவ்வொரு செயல்களின் மூலம் மகிழ்ச்சியைப் பரப்புபவர்களே மேன்மையானவர்கள்.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர்களை பழிதீர்க்கும் நோக்கில் செயற்படலாகாது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது தனித்துத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல. அது ஒரு பண்பாட்டுப் பல்கலைக்கழகம்.

தவிர, இலங்கையில் இருக்கக்கூடிய அத்தனை பல்கலைக்கழகங்களுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய ஒன்று.

இருந்தும் யாழ்.பல்கலைக்கழகத்தின் சில தீர்மானங்கள் ஒரு சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக எடுக்கப்படுவதுபோலத் தெரிகிறது.

இந்த நிலைமை பல்கலைக்கழகத்தின் கௌரவத்துக்கும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கும் ஆபத்தாக அமையும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இறுதியாண்டில் கல்வி கற்கின்ற சிவகஜன் என்ற மாணவன் மீது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் வகுப்புத் தடை விதித்ததுடன் ஊடகங்களுக்கு அவர் தகவல் வழங்கினார் என்ற குற்றச்சாட்டு உட்பட சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் உத்தரவு பிறப்பித்திருந்தது.

குறித்த மாணவன் தனக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடைக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஊடாக கொழும்பு உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அவ்வளவுதான் வழக்குத் தாக்கல் கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி செய்யப்பட, பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி மாணவன் சிவகஜனுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்குவதாக அறிவித்த யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம்; எனினும் விசாரணை தொடரும் எனக் குறிப்பிட்டிருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் ஏப்ரல் 2 ஆம் திகதி குறித்த மாணவனுக்கு யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் அனுப்பிய கடிதத்தில், குற்றப் பத்திரிகை தொடர்பில் தாங்கள் அளித்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு தங்கள் மீதான அனைத்து விசாரணைகளும் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லது. ஒரு நிர்வாகம் சம்பந்தப்பட்டவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அனைத்து விசாரணைகளிலும் இருந்து விலக்களிப்பது ஏற்புடையது.

ஆனால் நம் கேள்வி, குறித்த மாணவன் தனக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடைக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யாமல் விட்டிருந்தால்; நீங்கள் அந்த மாணவனின் வகுப்புத் தடையை நீக்கியிருப்பீர்களா?

ஆக, உயர்நீதிமன்றத்தின் விசாரணைக்குப் பதிலளிக்க போதிய சான்றாதாரம் இல்லை.

ஆகவே குறித்த வழக்கு வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை உங்களுக்கு ஏற்படாவிட்டால், நீங்கள் அந்த மாணவன் மீதான அத்தனை விசாரணைகளையும் நீக்கியிருப்பீர்களா?

25 நாட்களுக்கு மேலாக ஒரு மாணவனுக்கு வகுப்புத் தடை விதித்த நீங்கள் ஏன் உயர்நீதிமன்றத்தில் உங்களின் நடவடிக்கை சரியென நிரூபிக்க ஏன் தயங்குகிறீர்கள்.

இங்குதான் ஒரு சிலருக்காக மாணவர்களின் உரிமைகளில் கைவைத்து மொக்கேனப்படுகின்ற நிலைமைக்கு பல்கலைக்கழகம் ஆளாகிறது. இந்நிலைமையானது மாணவர்கள் முன் தலைகுனிந்து நிற்கின்ற அவலத்தை ஏற்படுத்திவிடும் கவனம்.

# சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம் வட மாகாணத்தில் அதிகரிப்பு ●●●●●●●●

## யுனிசெப் பிரதிநிதிகளிடம் வடக்கு ஆளுநர்

*(யாழ்ப்பாணம்)*

வடக்கு மாகாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள், இளவயது கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் யுனிசெப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து கள நிலைமைகளை ஆய்வு செய்யும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் குழு வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை (02.04.2025) சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநரிடம் யுனிசெப் அமைப்பு முன்னெடுத்துள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தமது கள நிலைமை ஆய்வு தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர், 1991ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபராக தான் பதவியேற்ற காலத்திலிருந்து யுனிசெப் அமைப்பு பல்வேறு வகையான உதவிகளை எமது மக்களுக்குச் செய்து வருகின்றது. அதற்கான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வடக்கில் சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன. மேலும், வடக்கு மாகாணம் தற்போது புதிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர் இல்லங்களுக்கு சிறுவர்களை சேர்க்கும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் ஏற்பட்ட வறுமை நிலைமை ஒரு காரணமாக உள்ளபோதும் பெற்றோர் மறுமணம் செய்வதால்தான் பெரியளவு பாதிப்பு ஏற்படுகின்றது. சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை இணைப்பதை ஊக்குவிக்கவேண்டாம் என அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் சிறுவர் இல்லங்களை நோக்கி வருபவர்களை இணைக்காமல்விட்டாலும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே இது எமக்கு சிக்கலான நிலைமையாக உள்ளது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மனநல பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கான, தங்க வைப்பதற்கான அரச இல்லங்கள் இல்லை என்று வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் யுனிசெப்பின் சிறுவர் பாதுகாப்பு தலைமை அதிகாரி ரியோனா அஸ்லான்சிவிலுடன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் பங்கேற்றனர்.

*(ம-4,7)*

## காட்டு யானை தாக்கியதில் பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை காட்டுயானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தாந்தாமலை, ரெட்பானா கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான மாமாங்கம் சந்திரா என்பவரே காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டு வளவினுள் புகுந்த யானைகளைக் கண்டு குறித்த பெண் உயிர் தப்புவதற்காக ஓடிய போது காட்டு யானை மறித்துத் தாக்கியதில் இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகின்றது. *(ம-4,7)*

## இ.போ.ச பஸ் மோதியதில் 2 வயதுச் சிறுவன் பலி

*(காலி)*

காலி-கொழும்பு பிரதான வீதியின் களுத்துறை வஸ்கடுவப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் மோதி 2 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவன் தனது பாட்டியுடன் கழிவுகளை சேகரிக்கும் வண்டிக்குக் குப்பைகளைக் கொடுப்பதற்காகச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பேருந்து சாரதி பொலிஸாரல் கைது செய்யப்பட்டுள்ளார். *(ம-4,7)*

## ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடு

## விசாரணையை ஆரம்பித்தது குற்றப்புலனாய்வுத் திணைக்களம்

*(கொழும்பு)*

ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 22 பேர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் B அறிக்கையை சமர்ப்பித்து இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியவர்களுள் பிரபல அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்குவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. *(ம-4,7)*

## காலாண்டில் உயர்ந்தது சுற்றுலாவிகளின் வருகை

*(கொழும்பு)*

சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது அதிகரித்து வருவதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டிற்கு வருகைதந்த மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 7 இலட்சத்து 22 ஆயிரத்து 276 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 2 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாவிகளின் வருகை பதிவாகியுள்ளது.

கடந்த காலாண்டில் இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாவிகள் வருகை தந்துள்ளதாகவும் மேலும் ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்தும் கணிசமான சுற்றுலாவிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளதாகவும் சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. *(ம-4,7)*

## வடமராட்சிக் கடற்பகுதியில் கடற்படையினரால் ஒருவர் கைது

*(யாழ்ப்பாணம்)*

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.


வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று அதிகாலை குறித்த கடற்பகுதியில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவர் படகுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளார். *(ம-4,7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025.07.01 முதல் ஓய்வூதியர்களுக்கு என்ன கிடைக்கும்?



அன்பு ஜவஹர்ஷா

2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கவுள்ள சம்பள அதிகரிப்பு தொடர்பாகவும் 10/2025 ஆம் இலக்கச் சுற்றறிக்கை தொர்பாகவும் கடந்த வாரங்களில் தகவல்கள் வலம்புரியில் வெளியாகியிருந்தன.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு அதிகரிக்கப்படவுள்ள ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக சில தகவல்களும் வெளிவந்திருந்தன.

அதற்கு மேலதிகமாக எழுப்பப்படும் வினாக்களுக்கு விடை தரும் முகமாக இந்தக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவைகளை வாசிப்பதற்கு முன்னர் சில விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

2016-2019 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று பலத்த எதிர்பார்ப்போடு இருந்தவர்களுக்கு விசேடமாக ஒரே முறையில் வரவு-செலவு திட்டத்தில் தீர்வு கூறப்படாமை தொடர்பாக, இதனால் பாதிக்கப்பட்ட சுமார் 1,18000 ஓய்வூதியர்களுக்கு பெரும் மனக்குறையும் கோபமும் இருப்பது நியாயமானதாகும். ஆனால் அரசாங்கத் தரப்பில் இதற்கு வேறு வகையில் நியாயம் சொல்லப்படுகின்றது.

2021.01.01 இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள் சுமார் 7, 00, 000 பேர்கள் இருக்க 2016-2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்குவதால் மீண்டும் ஒரு முரண்பாடு தோன்றும் என்ற அடிப்படையிலேயே மொத்தம் 7,00,000 பேருக்கு 2025.07.01, 2026.07.01, 2027.07.01 என்ற அடிப்படையில் மூன்று கட்டங்களாக நிவாரணம் காணப்படவுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை இன்னும் வெளியாகவில்லை. இருந்தாலும் ஓய்வூதியர்கள் ஆர்வத்துடன் வினாக்கள் தொடுத்து வருவதால் இலங்கை ஆசிரியர், அதிபர் சேவைகளின் முதலாம் வகுப்பில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு கிடைக்கவுள்ள அதிகரிப்பு தொடர்பாக இங்குள்ள நான்கு அட்டவணைகளில் தெளிவுபடுத்தியுள்ளேன். 1 ஆம், 2 ஆம் அட்டவணைகள் குறைக்கப்பட்ட ஓய்வூதியம் தொடர்பானது. இது ஓய்வுபெற்ற 10 வருடம் வரை கிடைக்கும் ஓய்வூதியமாகும். 3 ஆம், 4 ஆம் அட்டவணைகளில் உள்ளவை 10 வருடங்கள் கடந்த பின்னர் குறைக்கப்படாத ஓய்வூதியமாகும்.

2019.07.01 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற சகலருக்கும் 2017.12.31 வரையிலான சம்பளத்திற்கு ஓய்வூதியம் செய்யப்பட்டு 2019.07.01 முதல் வழங்கப்பட்டுவிட்டது. இன்னும் 2015 முதல் கிடைத்த 10,000 ரூபா அதிகரித்த சம்பளம் தமக்குக் கிடைக்கவில்லை என்று முறைப்படுகின்றவர்களுக்கு இது தெரியாமல் இருக்கின்றது. இரண்டு கட்டங்கள் அதாவது 2016, 2017 சம்பளத்தின்படி சகல ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதியம் செய்யப்பட்டு முடிந்துவிட்டது. மிகுதியாகவுள்ள 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளுக்குரிய மூன்று கட்டங்களே 2025.07.01 முதல் ஆரம்பமாகின்றது. இங்குள்ள அட்டவணைகளில் இது எவ்வளவு, எவ்வாறு கிடைக்கும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

2025.04.01 இற்குப் பின்னர் ஓய்வுபெறுகின்றவர்களுக்கு 2027.01.01 இற்குரிய முழுமையான சம்பளத்தின் படி ஓய்வூதியம் செய்யப்படும் என 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் 7.2 பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019.07.01 முதல் ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட்ட போது ஓய்வுபெறும் போது இறுதியாக பெற்ற சம்பளம் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 139 பக்கங்களைக் கொண்ட 14/2019 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையொன்று 2019. 05.31 அன்று வெளியிடப்பட்டது. இப்போது கிடைக்கவுள்ள ஓய்வூதிய அதிகரிப்பிற்கும் இப்படியொரு சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டும். இன்னும் சில வாரங்களில் இதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படும் என எதிர்பார்க்கலாம்.

2020.01.01 முதல் 2024.12.31 ஓய்வு பெற்றவர்களான சுமார் 40,000 பேர்கள் தமக்கு எந்த அதிகரிப்பும் இல்லை என்ற வேதனையில் உள்ளார்கள். இவர்கள் பெற்ற சம்பளத்தின் படியே இப்போது ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. 2020.01.01 இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள். இவர்கள் உடனேயே சமப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் அதிபர், ஆசிரியர்களுக்கு சீராக்கல் படி வழங்கப்பட்டு வந்தது. இந்த அட்டவணையில் உள்ளவர்களுக்கு அது கிடைக்க மாட்டாது. 2006 இற்குப் பின்னர் ஓய்வு பெறுகின்றவர்களுக்கு அந்த சீராக்கல் படி கிடைக்கும். அதையும் சேர்த்தே கணக்கு பார்க்க வேண்டும்.

ஓய்வுபெறும்போது கிடைப்பது குறைக்கப்பட்ட ஓய்வூதியமாகும். 10 வருடங்களுக்குப் பின்னரே குறைக்கப்படாத ஓய்வூதியம் கிடைக்கும். இந்த அட்டவணையில் உள்ளவர்கள் குறைக்கப்படாத ஓய்வூதியத்தை பெறுகின்றவர்கள் ஆவர். இவைகளை கருத்தில் கொண்டு உங்கள் விபரங்களை சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

1 இலங்கை ஆசிரியர் சேவை - I (குறைக்கப்பட்ட ஓய்வூதியம்)

| Persantage | 01.09.2019(Present Pension) | | | 01.07.2025 | | | 01.07.2026 | | | 01.07.2027 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017.01.01 Salary | | | 2018.01.01 Salary | | | 2019.01.01 Salary | | | 2020.01.01 Salary | | |
| | Yearly Salary | Monthly Salary | Pension | Salary | Pension | Increase | Salary | Pension | Increase | Salary | Pension | Increase |
| 79% | 372,360.00 | 31,030.00 | 24,513.70 | 35,670.00 | 28,179.30 | 3,665.60 | 40,310.00 | 31,844.90 | 3,665.60 | 44,950.00 | 35,510.50 | 3,665.60 |
| 79% | 383,412.00 | 31,951.00 | 25,241.29 | 36,729.00 | 29,015.91 | 3,774.62 | 41,507.00 | 32,790.53 | 3,774.62 | 46,285.00 | 36,565.15 | 3,774.62 |
| 79% | 394,464.00 | 32,872.00 | 25,968.88 | 37,788.00 | 29,852.52 | 3,883.64 | 42,704.00 | 33,736.16 | 3,883.64 | 47,620.00 | 37,619.80 | 3,883.64 |
| 78% | 405,516.00 | 33,793.00 | 26,358.54 | 38,847.00 | 30,300.66 | 3,942.12 | 43,901.00 | 34,242.78 | 3,942.12 | 48,955.00 | 38,184.90 | 3,942.12 |
| 78% | 416,568.00 | 34,714.00 | 27,076.92 | 39,906.00 | 31,126.68 | 4,049.76 | 45,098.00 | 35,176.44 | 4,049.76 | 50,290.00 | 39,226.20 | 4,049.76 |
| 78% | 427,620.00 | 35,635.00 | 27,795.30 | 40,965.00 | 31,952.70 | 4,157.40 | 46,295.00 | 36,110.10 | 4,157.40 | 51,625.00 | 40,267.50 | 4,157.40 |
| 78% | 438,672.00 | 36,556.00 | 28,513.68 | 42,024.00 | 32,778.72 | 4,265.04 | 47,492.00 | 37,043.76 | 4,265.04 | 52,960.00 | 41,308.80 | 4,265.04 |
| 78% | 449,724.00 | 37,477.00 | 29,232.06 | 43,083.00 | 33,604.74 | 4,372.68 | 48,689.00 | 37,977.42 | 4,372.68 | 54,295.00 | 42,350.10 | 4,372.68 |
| 78% | 460,776.00 | 38,398.00 | 29,950.44 | 44,142.00 | 34,430.76 | 4,480.32 | 49,886.00 | 38,911.08 | 4,480.32 | 55,630.00 | 43,391.40 | 4,480.32 |
| 78% | 471,828.00 | 39,319.00 | 30,668.82 | 45,201.00 | 35,256.78 | 4,587.96 | 51,083.00 | 39,844.74 | 4,587.96 | 56,965.00 | 44,432.70 | 4,587.96 |
| 78% | 482,880.00 | 40,240.00 | 31,387.20 | 46,260.00 | 36,082.80 | 4,695.60 | 52,280.00 | 40,778.40 | 4,695.60 | 58,300.00 | 45,474.00 | 4,695.60 |
| 78% | 493,932.00 | 41,161.00 | 32,105.58 | 47,319.00 | 36,908.82 | 4,803.24 | 53,477.00 | 41,712.06 | 4,803.24 | 59,635.00 | 46,515.30 | 4,803.24 |
| 78% | 504,984.00 | 42,082.00 | 32,823.96 | 48,378.00 | 37,734.84 | 4,910.88 | 54,674.00 | 42,645.72 | 4,910.88 | 60,970.00 | 47,556.60 | 4,910.88 |
| 77% | 516,036.00 | 43,003.00 | 33,112.31 | 49,437.00 | 38,066.49 | 4,954.18 | 55,871.00 | 43,020.67 | 4,954.18 | 62,305.00 | 47,974.85 | 4,954.18 |
| 77% | 527,088.00 | 43,924.00 | 33,821.48 | 50,496.00 | 38,881.92 | 5,060.44 | 57,068.00 | 43,942.36 | 5,060.44 | 63,640.00 | 49,002.80 | 5,060.44 |
| 77% | 538,140.00 | 44,845.00 | 34,530.65 | 51,555.00 | 39,697.35 | 5,166.70 | 58,265.00 | 44,864.05 | 5,166.70 | 64,975.00 | 50,030.75 | 5,166.70 |
| 77% | 549,192.00 | 45,766.00 | 35,239.82 | 52,614.00 | 40,512.78 | 5,272.96 | 59,462.00 | 45,785.74 | 5,272.96 | 66,310.00 | 51,058.70 | 5,272.96 |
| 76% | 560,244.00 | 46,687.00 | 35,482.12 | 53,673.00 | 40,791.48 | 5,309.36 | 60,659.00 | 46,100.84 | 5,309.36 | 67,645.00 | 51,410.20 | 5,309.36 |
| 76% | 571,296.00 | 47,608.00 | 36,182.08 | 54,732.00 | 41,596.32 | 5,414.24 | 61,856.00 | 47,010.56 | 5,414.24 | 68,980.00 | 52,424.80 | 5,414.24 |
| 76% | 582,348.00 | 48,529.00 | 36,882.04 | 55,791.00 | 42,401.16 | 5,519.12 | 63,053.00 | 47,920.28 | 5,519.12 | 70,315.00 | 53,439.40 | 5,519.12 |
| 76% | 593,400.00 | 49,450.00 | 37,582.00 | 56,850.00 | 43,206.00 | 5,624.00 | 64,250.00 | 48,830.00 | 5,624.00 | 71,650.00 | 54,454.00 | 5,624.00 |
| 76% | 604,452.00 | 50,371.00 | 38,281.96 | 57,909.00 | 44,010.84 | 5,728.88 | 65,447.00 | 49,739.72 | 5,728.88 | 72,985.00 | 55,468.60 | 5,728.88 |
| 76% | 615,504.00 | 51,292.00 | 38,981.92 | 58,968.00 | 44,815.68 | 5,833.76 | 66,644.00 | 50,649.44 | 5,833.76 | 74,320.00 | 56,483.20 | 5,833.76 |
| 76% | 626,556.00 | 52,213.00 | 39,681.88 | 60,027.00 | 45,620.52 | 5,938.64 | 67,841.00 | 51,559.16 | 5,938.64 | 75,655.00 | 57,497.80 | 5,938.64 |
| 76% | 637,608.00 | 53,134.00 | 40,381.84 | 61,086.00 | 46,425.36 | 6,043.52 | 69,038.00 | 52,468.88 | 6,043.52 | 76,990.00 | 58,512.40 | 6,043.52 |

Compiled by Anbu Javaharsha

2 இலங்கை அதிபர் சேவை - I (குறைக்கப்பட்ட ஓய்வூதியம்)

| Persantage | 01.09.2019(Present Pension) | | | 01.07.2025 | | | 01.07.2026 | | | 01.07.2027 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017.01.01 Salary | | | 2018.01.01 Salary | | | 2019.01.01 Salary | | | 2020.01.01 Salary | | |
| | Yearly Salary | Monthly Salary | Pension | Salary | Pension | Increase | Salary | Pension | Increase | Salary | Pension | Increase |
| 79% | 383,748.00 | 31,979.00 | 25,263.41 | 36,761.00 | 29,041.19 | 3,777.78 | 41,543.00 | 32,818.97 | 3,777.78 | 46,325.00 | 36,596.75 | 3,777.78 |
| 79% | 394,800.00 | 32,900.00 | 25,991.00 | 37,820.00 | 29,877.80 | 3,886.80 | 42,740.00 | 33,764.60 | 3,886.80 | 47,660.00 | 37,651.40 | 3,886.80 |
| 78% | 405,852.00 | 33,821.00 | 26,380.38 | 38,879.00 | 30,325.62 | 3,945.24 | 43,937.00 | 34,270.86 | 3,945.24 | 48,995.00 | 38,216.10 | 3,945.24 |
| 78% | 416,904.00 | 34,742.00 | 27,098.76 | 39,938.00 | 31,151.64 | 4,052.88 | 45,134.00 | 35,204.52 | 4,052.88 | 50,330.00 | 39,257.40 | 4,052.88 |
| 78% | 427,956.00 | 35,663.00 | 27,817.14 | 40,997.00 | 31,977.66 | 4,160.52 | 46,331.00 | 36,138.18 | 4,160.52 | 51,665.00 | 40,298.70 | 4,160.52 |
| 78% | 439,008.00 | 36,584.00 | 28,535.52 | 42,056.00 | 32,803.68 | 4,268.16 | 47,528.00 | 37,071.84 | 4,268.16 | 53,000.00 | 41,340.00 | 4,268.16 |
| 78% | 450,060.00 | 37,505.00 | 29,253.90 | 43,115.00 | 33,629.70 | 4,375.80 | 48,725.00 | 38,005.50 | 4,375.80 | 54,335.00 | 42,381.30 | 4,375.80 |
| 78% | 461,112.00 | 38,426.00 | 29,972.28 | 44,174.00 | 34,485.72 | 4,483.44 | 49,922.00 | 38,939.16 | 4,483.44 | 55,670.00 | 43,422.60 | 4,483.44 |
| 78% | 472,164.00 | 39,347.00 | 30,690.66 | 45,233.00 | 35,281.74 | 4,591.08 | 51,119.00 | 39,872.82 | 4,591.08 | 57,005.00 | 44,463.90 | 4,591.08 |
| 78% | 483,216.00 | 40,268.00 | 31,409.04 | 46,292.00 | 36,107.76 | 4,698.72 | 52,316.00 | 40,806.48 | 4,698.72 | 58,340.00 | 45,505.20 | 4,698.72 |
| 78% | 494,268.00 | 41,189.00 | 32,127.42 | 47,351.00 | 36,933.78 | 4,806.36 | 53,513.00 | 41,740.14 | 4,806.36 | 59,675.00 | 46,546.50 | 4,806.36 |
| 78% | 507,876.00 | 42,323.00 | 33,011.94 | 48,657.00 | 37,952.46 | 4,940.52 | 54,991.00 | 42,892.98 | 4,940.52 | 61,325.00 | 47,833.50 | 4,940.52 |
| 77% | 521,484.00 | 43,457.00 | 33,461.89 | 49,963.00 | 38,471.51 | 5,009.62 | 56,469.00 | 43,481.13 | 5,009.62 | 62,975.00 | 48,490.75 | 5,009.62 |
| 77% | 535,092.00 | 44,591.00 | 34,335.07 | 51,269.00 | 39,477.13 | 5,142.06 | 57,947.00 | 44,619.19 | 5,142.06 | 64,625.00 | 49,761.25 | 5,142.06 |
| 77% | 548,700.00 | 45,725.00 | 35,208.25 | 52,575.00 | 40,482.75 | 5,274.50 | 59,425.00 | 45,757.25 | 5,274.50 | 66,275.00 | 51,031.75 | 5,274.50 |
| 76% | 562,308.00 | 46,859.00 | 35,612.84 | 53,881.00 | 40,949.56 | 5,336.72 | 60,903.00 | 46,286.28 | 5,336.72 | 67,925.00 | 51,623.00 | 5,336.72 |
| 76% | 575,916.00 | 47,993.00 | 36,474.68 | 55,187.00 | 41,942.12 | 5,467.44 | 62,381.00 | 47,409.56 | 5,467.44 | 69,575.00 | 52,877.00 | 5,467.44 |
| 76% | 589,524.00 | 49,127.00 | 37,336.52 | 56,493.00 | 42,934.68 | 5,598.16 | 63,859.00 | 48,532.84 | 5,598.16 | 71,225.00 | 54,131.00 | 5,598.16 |
| 76% | 603,132.00 | 50,261.00 | 38,198.36 | 57,799.00 | 43,927.24 | 5,728.88 | 65,337.00 | 49,656.12 | 5,728.88 | 72,875.00 | 55,385.00 | 5,728.88 |
| 76% | 616,740.00 | 51,395.00 | 39,060.20 | 59,105.00 | 44,919.80 | 5,859.60 | 66,815.00 | 50,779.40 | 5,859.60 | 74,525.00 | 56,639.00 | 5,859.60 |
| 76% | 630,348.00 | 52,529.00 | 39,922.04 | 60,411.00 | 45,912.36 | 5,990.32 | 68,293.00 | 51,902.68 | 5,990.32 | 76,175.00 | 57,893.00 | 5,990.32 |
| 76% | 643,956.00 | 53,663.00 | 40,783.88 | 61,717.00 | 46,904.92 | 6,121.04 | 69,771.00 | 53,025.96 | 6,121.04 | 77,825.00 | 59,147.00 | 6,121.04 |
| 75% | 657,564.00 | 54,797.00 | 41,097.75 | 63,023.00 | 47,267.25 | 6,169.50 | 71,249.00 | 53,436.75 | 6,169.50 | 79,475.00 | 59,606.25 | 6,169.50 |
| 75% | 671,172.00 | 55,931.00 | 41,948.25 | 64,329.00 | 48,246.75 | 6,298.50 | 72,727.00 | 54,545.25 | 6,298.50 | 81,125.00 | 60,843.75 | 6,298.50 |
| 75% | 684,780.00 | 57,065.00 | 42,798.75 | 65,635.00 | 49,226.25 | 6,427.50 | 74,205.00 | 55,653.75 | 6,427.50 | 82,775.00 | 62,081.25 | 6,427.50 |

Compiled by Anbu Javaharsha

3 இலங்கை ஆசிரியர் சேவை - I (குறைக்கப்படாத ஓய்வூதியம்)

| Persantage | 01.09.2019(Present Pension) | | | 01.07.2025 | | | 01.07.2026 | | | 01.07.2027 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017.01.01 Salary | | | 2018.01.01 Salary | | | 2019.01.01 Salary | | | 2020.01.01 Salary | | |
| | Yearly Salary | Monthly Salary | Pension | Salary | Pension | Increase | Salary | Pension | Increase | Salary | Pension | Increase |
| 89% | 372,360.00 | 31,030.00 | 27,616.70 | 35,670.00 | 31,746.30 | 4,129.60 | 40,310.00 | 35,875.90 | 4,129.60 | 44,950.00 | 40,005.50 | 4,129.60 |
| 89% | 383,412.00 | 31,951.00 | 28,496.39 | 36,729.00 | 32,688.81 | 4,252.42 | 41,507.00 | 36,941.23 | 4,252.42 | 46,285.00 | 41,193.65 | 4,252.42 |
| 89% | 394,464.00 | 32,872.00 | 29,256.08 | 37,788.00 | 33,631.32 | 4,375.24 | 42,704.00 | 38,006.56 | 4,375.24 | 47,620.00 | 42,381.80 | 4,375.24 |
| 88% | 405,516.00 | 33,793.00 | 29,737.84 | 38,847.00 | 34,185.36 | 4,447.52 | 43,901.00 | 38,632.88 | 4,447.52 | 48,955.00 | 43,080.40 | 4,447.52 |
| 88% | 416,568.00 | 34,714.00 | 30,548.32 | 39,906.00 | 35,117.28 | 4,568.96 | 45,098.00 | 39,686.24 | 4,568.96 | 50,290.00 | 44,255.20 | 4,568.96 |
| 88% | 427,620.00 | 35,635.00 | 31,358.80 | 40,965.00 | 36,049.20 | 4,690.40 | 46,295.00 | 40,739.60 | 4,690.40 | 51,625.00 | 45,430.00 | 4,690.40 |
| 88% | 438,672.00 | 36,556.00 | 32,169.28 | 42,024.00 | 36,981.12 | 4,811.84 | 47,492.00 | 41,792.96 | 4,811.84 | 52,960.00 | 46,604.80 | 4,811.84 |
| 88% | 449,724.00 | 37,477.00 | 32,979.76 | 43,083.00 | 37,913.04 | 4,933.28 | 48,689.00 | 42,846.32 | 4,933.28 | 54,295.00 | 47,779.60 | 4,933.28 |
| 88% | 460,776.00 | 38,398.00 | 33,790.24 | 44,142.00 | 38,844.96 | 5,054.72 | 49,886.00 | 43,899.68 | 5,054.72 | 55,630.00 | 48,954.40 | 5,054.72 |
| 88% | 471,828.00 | 39,319.00 | 34,600.72 | 45,201.00 | 39,776.88 | 5,176.16 | 51,083.00 | 44,953.04 | 5,176.16 | 56,965.00 | 50,129.20 | 5,176.16 |
| 88% | 482,880.00 | 40,240.00 | 35,411.20 | 46,260.00 | 40,708.80 | 5,297.60 | 52,280.00 | 46,006.40 | 5,297.60 | 58,300.00 | 51,304.00 | 5,297.60 |
| 88% | 493,932.00 | 41,161.00 | 36,221.68 | 47,319.00 | 41,640.72 | 5,419.04 | 53,477.00 | 47,059.76 | 5,419.04 | 59,635.00 | 52,478.80 | 5,419.04 |
| 88% | 504,984.00 | 42,082.00 | 37,032.16 | 48,378.00 | 42,572.64 | 5,540.48 | 54,674.00 | 48,113.12 | 5,540.48 | 60,970.00 | 53,653.60 | 5,540.48 |
| 87% | 516,036.00 | 43,003.00 | 37,412.61 | 49,437.00 | 43,010.19 | 5,597.58 | 55,871.00 | 48,607.77 | 5,597.58 | 62,305.00 | 54,205.35 | 5,597.58 |
| 87% | 527,088.00 | 43,924.00 | 38,213.88 | 50,496.00 | 43,931.52 | 5,717.64 | 57,068.00 | 49,649.16 | 5,717.64 | 63,640.00 | 55,366.80 | 5,717.64 |
| 87% | 538,140.00 | 44,845.00 | 39,015.15 | 51,555.00 | 44,852.85 | 5,837.70 | 58,265.00 | 50,690.55 | 5,837.70 | 64,975.00 | 56,528.25 | 5,837.70 |
| 87% | 549,192.00 | 45,766.00 | 39,816.42 | 52,614.00 | 45,774.18 | 5,957.76 | 59,462.00 | 51,731.94 | 5,957.76 | 66,310.00 | 57,689.70 | 5,957.76 |
| 86% | 560,244.00 | 46,687.00 | 40,150.82 | 53,673.00 | 46,158.78 | 6,007.96 | 60,659.00 | 52,166.74 | 6,007.96 | 67,645.00 | 58,174.70 | 6,007.96 |
| 86% | 571,296.00 | 47,608.00 | 40,942.88 | 54,732.00 | 47,069.52 | 6,126.64 | 61,856.00 | 53,196.16 | 6,126.64 | 68,980.00 | 59,322.80 | 6,126.64 |
| 86% | 582,348.00 | 48,529.00 | 41,734.94 | 55,791.00 | 47,980.26 | 6,245.32 | 63,053.00 | 54,225.58 | 6,245.32 | 70,315.00 | 60,470.90 | 6,245.32 |
| 86% | 593,400.00 | 49,450.00 | 42,527.00 | 56,850.00 | 48,891.00 | 6,364.00 | 64,250.00 | 55,255.00 | 6,364.00 | 71,650.00 | 61,619.00 | 6,364.00 |
| 86% | 604,452.00 | 50,373.00 | 43,319.06 | 57,909.00 | 49,801.74 | 6,482.68 | 65,447.00 | 56,284.42 | 6,482.68 | 72,985.00 | 62,767.10 | 6,482.68 |
| 86% | 615,504.00 | 51,292.00 | 44,111.12 | 58,968.00 | 50,712.48 | 6,601.36 | 66,644.00 | 57,313.84 | 6,601.36 | 74,320.00 | 63,915.20 | 6,601.36 |
| 86% | 626,556.00 | 52,213.00 | 44,903.18 | 60,027.00 | 51,623.22 | 6,720.04 | 67,841.00 | 58,343.26 | 6,720.04 | 75,655.00 | 65,063.30 | 6,720.04 |
| 86% | 637,608.00 | 53,134.00 | 45,696.24 | 61,086.00 | 52,533.96 | 6,838.72 | 69,038.00 | 59,372.68 | 6,838.72 | 76,990.00 | 66,211.40 | 6,838.72 |

Compiled by Anbu Javaharsha

4 இலங்கை அதிபர் சேவை - I (குறைக்கப்படாத ஓய்வூதியம்)

| Persantage | 01.09.2019(Present Pension) | | | 01.07.2025 | | | 01.07.2026 | | | 01.07.2027 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017.01.01 Salary | | | 2018.01.01 Salary | | | 2019.01.01 Salary | | | 2020.01.01 Salary | | |
| | Yearly Salary | Monthly Salary | Pension | Salary | Pension | Increase | Salary | Pension | Increase | Salary | Pension | Increase |
| 89% | 383,748.00 | 31,979.00 | 28,461.31 | 36,761.00 | 32,717.29 | 4,255.98 | 41,543.00 | 36,973.27 | 4,255.98 | 46,325.00 | 41,229.25 | 4,255.98 |
| 89% | 394,800.00 | 32,900.00 | 29,281.00 | 37,820.00 | 33,659.80 | 4,378.80 | 42,740.00 | 38,038.60 | 4,378.80 | 47,660.00 | 42,417.40 | 4,378.80 |
| 88% | 405,852.00 | 33,821.00 | 29,762.48 | 38,879.00 | 34,213.52 | 4,451.04 | 43,937.00 | 38,664.56 | 4,451.04 | 48,995.00 | 43,115.60 | 4,451.04 |
| 88% | 416,904.00 | 34,742.00 | 30,572.96 | 39,938.00 | 35,145.44 | 4,572.48 | 45,134.00 | 39,717.92 | 4,572.48 | 50,330.00 | 44,290.40 | 4,572.48 |
| 88% | 427,956.00 | 35,663.00 | 31,383.44 | 40,997.00 | 36,077.36 | 4,693.92 | 46,331.00 | 40,771.28 | 4,693.92 | 51,665.00 | 45,465.20 | 4,693.92 |
| 88% | 439,008.00 | 36,584.00 | 32,193.92 | 42,056.00 | 37,009.28 | 4,815.36 | 47,528.00 | 41,824.64 | 4,815.36 | 53,000.00 | 46,640.00 | 4,815.36 |
| 88% | 450,060.00 | 37,505.00 | 33,004.40 | 43,115.00 | 37,941.20 | 4,936.80 | 48,725.00 | 42,878.00 | 4,936.80 | 54,335.00 | 47,814.80 | 4,936.80 |
| 88% | 461,112.00 | 38,426.00 | 33,814.88 | 44,174.00 | 38,873.12 | 5,058.24 | 49,922.00 | 43,931.36 | 5,058.24 | 55,670.00 | 48,989.60 | 5,058.24 |
| 88% | 472,164.00 | 39,347.00 | 34,625.36 | 45,233.00 | 39,805.04 | 5,179.68 | 51,119.00 | 44,984.72 | 5,179.68 | 57,005.00 | 50,164.40 | 5,179.68 |
| 88% | 483,216.00 | 40,268.00 | 35,435.84 | 46,292.00 | 40,736.96 | 5,301.12 | 52,316.00 | 46,038.08 | 5,301.12 | 58,340.00 | 51,339.20 | 5,301.12 |
| 88% | 494,268.00 | 41,189.00 | 36,246.32 | 47,351.00 | 41,668.88 | 5,422.56 | 53,513.00 | 47,091.44 | 5,422.56 | 59,675.00 | 52,514.00 | 5,422.56 |
| 88% | 507,876.00 | 42,323.00 | 37,244.24 | 48,657.00 | 42,818.16 | 5,573.92 | 54,991.00 | 48,392.08 | 5,573.92 | 61,325.00 | 53,966.00 | 5,573.92 |
| 87% | 521,484.00 | 43,457.00 | 37,807.59 | 49,963.00 | 43,467.81 | 5,660.22 | 56,469.00 | 49,128.03 | 5,660.22 | 62,975.00 | 54,788.25 | 5,660.22 |
| 87% | 535,092.00 | 44,591.00 | 38,794.17 | 51,269.00 | 44,604.03 | 5,809.86 | 57,947.00 | 50,413.89 | 5,809.86 | 64,625.00 | 56,223.75 | 5,809.86 |
| 87% | 548,700.00 | 45,725.00 | 39,780.75 | 52,575.00 | 45,740.25 | 5,959.50 | 59,425.00 | 51,699.75 | 5,959.50 | 66,275.00 | 57,659.25 | 5,959.50 |
| 86% | 562,308.00 | 46,859.00 | 40,298.74 | 53,881.00 | 46,337.66 | 6,038.92 | 60,903.00 | 52,376.58 | 6,038.92 | 67,925.00 | 58,415.50 | 6,038.92 |
| 86% | 575,916.00 | 47,993.00 | 41,273.98 | 55,187.00 | 47,460.82 | 6,186.84 | 62,381.00 | 53,647.66 | 6,186.84 | 69,575.00 | 59,834.50 | 6,186.84 |
| 86% | 589,524.00 | 49,127.00 | 42,249.22 | 56,493.00 | 48,583.98 | 6,334.76 | 63,859.00 | 54,918.74 | 6,334.76 | 71,225.00 | 61,253.50 | 6,334.76 |
| 86% | 603,132.00 | 50,261.00 | 43,224.46 | 57,799.00 | 49,707.14 | 6,482.68 | 65,337.00 | 56,189.82 | 6,482.68 | 72,875.00 | 62,672.50 | 6,482.68 |
| 86% | 616,740.00 | 51,395.00 | 44,199.70 | 59,105.00 | 50,830.30 | 6,630.60 | 66,815.00 | 57,460.90 | 6,630.60 | 74,525.00 | 64,091.50 | 6,630.60 |
| 86% | 630,348.00 | 52,529.00 | 45,174.94 | 60,411.00 | 51,953.46 | 6,778.52 | 68,293.00 | 58,731.98 | 6,778.52 | 76,175.00 | 65,510.50 | 6,778.52 |
| 86% | 643,956.00 | [illegible] | [illegible] | 61,717.00 | 53,076.62 | 6,926.44 | 69,771.00 | 60,003.06 | 6,926.44 | 77,825.00 | 66,929.50 | 6,926.44 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | 53,569.55 | 6,992.10 | 71,249.00 | 60,561.65 | 6,992.10 | 79,475.00 | 67,553.75 | 6,992.10 |
| 85% | 671,172.00 | 55,931.00 | 47,541.35 | 64,329.00 | 54,679.65 | 7,138.30 | 72,727.00 | 61,817.95 | 7,138.30 | 81,125.00 | 68,956.25 | 7,138.30 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | 65,635.00 | 55,789.75 | 7,284.50 | 74,205.00 | 63,074.25 | 7,284.50 | 82,775.00 | 70,358.75 | 7,284.50 |

Compiled by Anbu Javaharsha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை கிடைக்க வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளிட்டுள்ள அறிவிப்பில்,

முன்னரே குறிப்பிட்டபடி இன்று (நேற்று) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமான மழை கிடைக்கத் தொடங்கியுள்ளது. இந்த மழை எதிர்வரும் 09.04.2025 வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## யாழில் இம்மாத...

பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் அதிகளவான மாவட்டங்களைக் கொண்டுள்ள வட மாகாணத்தில் தற்போது வவுனியா மாவட்டத்தில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வவுனியாப் பிராந்திய அலுவலகத்திற்குப் பயணம் செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

வடமாகாண மக்கள் அதிகளவில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளமையால், அவர்களுக்கான துரித சேவைகளை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிப்பது பொருத்தமானதென, 2025.01.31 அன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்திலேயே குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## சில உள்ளூராட்சி...

களைக் கொண்ட வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று மீண்டும் பரிசீலிக்கப்பட்டபோது, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மொஹமட் லாஃபர் தாஹிர் மற்றும் கே.பி.பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்களால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ்களின் அசல் நகல்களுடன் வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்வது தொடர்பாக நீதிமன்றத்தில் இணக்கம் எட்டப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேவேளை, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மனுக்கள் தாக்கல் செய்துள்ள உள்ளூராட்சி மன்றங்களில் இன்று வியாழக்கிழமை வரை தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்றுப் புதன்கிழமை உத்தரவிட்டது.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை நீதிமன்றத்தில் சவால் செய்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த உத்தரவு பொருந்தும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதியரசர் எம்.டி. முகமது லாஃபர் மற்றும் நீதியரசர் கே.பி. பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (ம-7,4)

## திஸ்ஸ விகாரை...

யாடலொன்று இடம்பெறவுள்ளது.

தையிட்டியில் பொதுமக்களின் காணிகளில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள விகாரை விடயம் தொடர்பில் சர்வமதத் தலைவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

மேலும் [illegible] பாதிக்கப்பட்ட [illegible]

களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவார் எனத் தெரியவந்துள்ளது.(ம-7,4)

## மீனவர்கள்...

னம் இந்தியப் பிரதமரிடம் பகிரங்க கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை வெள்ளிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இக்கோரிக்கையை மீனவர்கள் விடுத்துள்ளனர்.

இதற்கமைய பிரதமர் மோடிக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் நேற்று கையளித்துள்ளனர்.

இதன் பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதீசன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென தொடர்ச்சியாக நாங்கள் கோரிக்கை விடுத்து வந்திருக்கிறோம். ஆனால் இலங்கை, இந்திய அரசுகள் இந்தப் பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காத நிலைமையே காணப்படுகிறது.

எனவே இலங்கைக்கு வருகின்ற இந்தியப் பிரதமர் இலங்கை, இந்திய மீனவர் விவகாரத்திற்கு சரியான தீர்வொன்றை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம்.

அதாவது எமது கடற்பரப்பிற்குள் எக்காரணம் கொண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி வரக் கூடாது. அதனையும் மீறி வந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார். (ம-7,4)

## தேச...

[illegible] பாராளு

மன்ற சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற விவகாரக் குழுவின் கூட்டத்தின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தப் பிரேரணை தொடர்பாகப் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் இந்த விவகாரம் பல கவலைகளை எழுப்புகிறது என்றார்.

இதற்கிடையில், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நிலையியற் கட்டளைகளின் கீழ் சில வரம்புகள் இருந்தபோதிலும், அரசாங்கம் இந்தப் பிரேரணையைத் தொடர விரும்புவதாகக் கூறினார். (ம-7,4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.04.02
சீட்டிழுப்பு இலக்கம் 5794
E 5 1 2 7 6 9
அத சம்பத
E 2 7 6 9
சீட்டிழுப்பு இலக்கம் 0369
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1824
Z 29 30 62 74 Z
Double Chance 58696

மெகா பவர்
திகதி 02/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2142
T 09 01 30 61 73

NLB ஜய
திகதி 2025.04.02
சீட்டிழுப்பு இலக்கம் 062
C 6 1 8 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4036
சீட்டிழுப்பு திகதி | 02.04.2025
M 09 52 58 66
M
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.02
சீட்டிழுப்பு இலக்கம் 1103
விருச்சிகம் 09 17 51 55 விருச்சிகம்
88614 45

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.04.2025 வெற்றி வாரம் 502
E 0 7 2 8 6 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,815,801.20
65669
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2768
சீட்டிழுப்பு திகதி 2025.04.02 தினம் புதன்கிழமை
01 23 60 76 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,154,732.80
DLB

சனிதா
திகதி 02.04.2025 வெற்றி வாரம் 4929
16 33 52 61 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,252,584.00
76655
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.04.02 வெற்றி வாரம் 2117
05 37 48 57 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,747,502.00
DLB

சீட்டிழுப்பு வாரம் 4480
சீட்டிழுப்பு திகதி 02.04.2025 தினம் புதன்கிழமை
20 25 40 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,274,534.80
199744
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 20 13 29 33 59
1944
02.04.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,632,826.20
DLB

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2594
திகதி 2025.04.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,186,883.20
ADA KOTIPATHI
19 45 48 54 Y
511295
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=), இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம்
**காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)**

தொடர்புகளுக்கு:

**076 935 3971 / 076 987 8617**
**076 860 2770**

(3829)



## Smart Science Academy
## A/L 2027 கணித விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம் APRIL 03

- PHYSICS T.சம்பந்தன் BSc, PGDE
- CHEMISTRY S.சுரேஸ்குமார் BSc (Hons), PGDE
- BIOLOGY K.சுதா BSc with Ed (Hons)
- COM.MATHS V.ஹரிவண்ணன் BSc, PGDE

அனுமதிகள் 03.04.2025 – 10.04.2025 வரை வழங்கப்படும்.

**154A, Navalar Road, Jaffna.**
**Tel : 0777 872 903, 0775 559 028**

(3832)



## குயின் அக்கடமி (Queen Academy)

உங்கள் கல்வியை மேம்படுத்திக் கொள்ள சிறந்த வாய்ப்பு
**தரம் 6 முதல் 11 வரை**
**அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும்**

- குழுவாக இணைந்து கற்பித்தல் (Group Class)
- தனிப்பட்ட முறையில் கற்பித்தல் (Personal Class)
- நிகழ்நிலை முறை (Zoom Online)
- யாழ். நகரை அண்மித்த பகுதிகள்

A.லக்ஷினி
Bachelor of Business management, Honours in project management (Bpm)

**074 226 2429**

(3828)


## பிறந்து...

உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்பு தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

ஆண், பெண் என இரட்டைக் குழந்தையாக 7 மாதங்களில் குழந்தைகள் பிறந்த நிலையில் ஆண் குழந்தை பிறந்ததிலிருந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கண்காணிப்பு பகுதியில் (SCU) வைக்கப்பட்டுள்ள நிலையில் பெண் குழந்தை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, கர்ரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2603)

**076 825 7716** (ஆகாஸ்)



## வேலையாள் தேவை

யாழ். நகரை அண்டிய சிற்றுண்டிச்சாலைக்கு சப்ளையர் வேலையாட்கள் தேவை.
(ஆண் ஊழியர்கள் மட்டும்)

தொடர்புகளுக்கு :
**077 275 9799**

(3831)



## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
**0777-068-777**
v2vacancies@gmail.com

(C-2604)



## TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

## தொழில்நுட்பப் பிரிவு
# A/L 2027

**ஆரம்பம் : 05.04.2025**
**(சனிக்கிழமை)**
**நேரம் : காலை 8.30 மணி**

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு : **077 0175 346**

(C-2602)



## வைத்தியம்

வலிப்பு நோய்|கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி| மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**

(3813)



## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு

பாவித்த நல்ல நிலையிலுள்ள
பெரிய குளிர்சாதனப் பெட்டி
விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளவும்.

**077 649 1027**

(991)



## DMI - ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம்) யாழ்ப்பாணம்
## A/L 2027 புவியியல்
## N.BABU

- சனி, ஞாயிறு : 9 am - 10 am
- ஆரம்பம் : 05.04.2025 (சனி - 9 am)

⇨ புவியியலை 27 வருடமாகக் கற்பிக்கும் அனுபவமும், தேர்ச்சியும் கொண்ட ஆசிரியர்.
⇨ விடுமுறை நாட்களில் அதிக மணித்தியாலங்கள் Extra class எடுக்கும் ஆசிரியர்.
⇨ அலகு ரீதியிலான பரீட்சைகள், மாதிரிப் பரீட்சைகள் நடைபெறுவதுடன் Exam paper திருத்திக் கொடுக்கப்படும்.
⇨ பாடசாலையில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்.
⇨ Paper class க்கு என தனியான மணித்தியாலங்கள்.
⇨ Batch முடியும் போது பாடத்திட்டம் முழுமையாக முடிக்கப்படும்.
⇨ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

(3805)

**077 936 5087**



## வாகனம் வாடகைக்கு தேவை

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் உணவுப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு 10 ½ அடி நீளமான அலுமினியம் பொடியுடனான பட்டா ரக வாகனம் நாளாந்த அல்லது மாதாந்த அடிப்படையில் சாரதியுடன் வாடகைக்குத் தேவை.

(3824)

**077 122 1289**



## சதாபொன்ஸ் கல்வி நிலையம்
மாலி சந்தி, அல்வாய்.
## SATHAPONS, ALVAI

**க.பொ.த உ/த 2027**
**வர்த்தகப் பிரிவு ஆரம்பம்**
**12.04.2025 சனிக்கிழமை**
**காலை 8.00 மணி**

| | |
|---|---|
| கணக்கீடு | – V.பகீரதன் |
| வணிகக்கல்வி | – T.லோகேஸ் |
| பொருளியல் | – V.ஜெகதீஸ் |

தொடர்பு : 077 309 5176, 076 126 0105
021 226 3206

(C-2601) - நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.